Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

# அரசும் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு முஸ்தீபு

## நல்லெண்ண சமிக்ஞைகள் வெளிவருகின்றன

## ★ பொலிசாரை புலிகள் விடுவித்தனர்

## ★ கடல் வலய தடை நீக்கம்

## ★உணவுப்பொருள் விநியோகம்

சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும்நோக்குடன் புலிகளும் அரசும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சமீபத்தில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த கிறிஸ்தவ தூதுக்குழுவினரும் சர்வோதயத் தலைவரும் புலிகளைச் சந்தித்த போது புலிகள் பேச்சுவார்த்தைக்கான தங்கள் விருப்பைத் தெரிவித்திருந்தனர். இதில் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான நல்லெண்ணங்களை கட்டியெழுப்ப இரு தரப்பினரும் சமிக்ஞைகளை வெளிக்காட்ட வேண்டும்என்றுகோரப்பட்டது. இதன் படி புலிகளும் அரசும் பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் முதல் பகுதியாக புலிகள் ரண்டு பொலிசாரை விடுவித்துள்ளனர். ஆயர் மார்க்கஸ் பெர்ணண்டோவின் வேண்டுகோளுக்கு இணங்கவே இவர்கள்விடுவிக்கப்பட்டனர். கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்பட்ட இவர்கள் திருமலைக்கு கப்பலில் சென்றனர். மாங்குளம் பொலிஸ் நிலையத்திலிருந்து பிடிக்கப்பட்ட திலகரத்தின பண்டா என்ற கான்ஸ்டபிளும் ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்திலிருந்து பிடிக்கப்பட்ட சந்திரசேகர என்ற சாரதியுமே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்களுடன் அல்பிரட் அலக்சாந்தர் என்ற குருவானவரும் திருமலை வந்தார். ஆயர் மார்க்கஸ் பெர்ணண்டோவின் விசேட தூதுவரான இவரிடமே பாலசிங்கம் இவர்களை ஒப்படைத்திருந்தார். தனது தூதுவரிடம்புலிகளின் தலைமைப் பீடத்திற்கு பொலிசாரை விடுவிக்கும்படி ஆயர்கடிதம் மூலமாக கோரியிருந்தார். பின்னர் இவர்கள் இருவரும் கொழும்புக்கு பொலிஸ் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் மற்றவர்களை விட வயதானவர்கள் என்பதாலும் கண்பார்வைப் பிரச்சனை கொண்டவர்கள் என்பதாலுமே விடுவிக்கப்பட்டனர் என்று விடுவிக்கப்பட்டவர்கள் கூறியுள்ளனர்.

வடபகுதியில் உள்ள மீன்பிடித்தடையை அரசு நீக்கும் என்று புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ராஜா அமரசேகர தெரிவித்துள்ளார். மார்ச் முதலாம் திகதி முதல் இந்த தடை நீக்கப்படும்.

ம.ப.பார்க்க..

# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க்கட்சிகள் வெற்றி

11 வருடங்களின் பின்னர் வடக்கு கிழக்கில் நடைபெற்ற தேர்தலின் போது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கிழக்கு மாகாணத்தில் எட்டு மணித்தியால ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இரவு பத்து மணி முதல் அதிகாலை வரை அம்பாறை, திருமலை, மட்டக்களப்பு பகுதிகளில் இந்த ஊரடங்குச் சட்ட அமுலாக்கம் நடைபெற்றது.

இந்த தேர்தலின் போது மட்டக்களப்பு பகுதியில் இரண்டு இடங்களில் கிரனெட் வீச்சு நடைபெற்றது. ஆயினும் யாரும் காயமடையவில்லை. வாக்காளர்களை மிரட்டும் முயற்சியே இது என்று இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணம், வவுனியா ஆகிய பகுதிகளில் நாற்பது உள்ளூராட்சிச் சபைகளுக்கு 431 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் 762930 வாக்காளர்கள் கலந்து கொண்டனர். 2031 பேர் போட்டியிட்டனர். அம்பாறையில் எழுபது வீதமானவர்களும் முஸ்லிம் பகுதிகளில் 90 வீதமானவர்களும் மட்டக்களப்பில் 45 வீதமானவர்களும்,திருமலையில் 42 முதல் ஐம்பது வீதமானவர்களும்வாக்களித்தனர். வவுனியாவில் 56 வீதமானவர்கள் வாக்களித்திருந்தனர்.

ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் பயமுறுத்தல்களிலும்தாக்குதல்களிலும் இறங்கியதாக எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவரும்சாதாரண மக்களும் தெரிவித்திருக்கிறார்கள். வாக்காளர்கள் தாக்கப்பட்டதாகவும் தேர்தல் அதிகாரிகள் மிரட்டப்பட்டதாகவும் ஐ.தே.க ஆதரவாளர்களுக்கு பொலிசார் உதவியதாகவும் தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பில் பொலிசார் வானத்தை நோக்கி

4ம் பக்கம் பார்க்க..

# கொத்தலாவலே பதவிநீக்கம் புதிய தகவல்கள்

கொத்தலாவலே பதவி நீக்கம் செய்யப்பட்டது குறித்து தற்போது மேலும் தகவல்கள் கிடைத்துள்ளன. கொத்தலாவலே அமெரிக்க இராணுவ பயிற்சிக் கூடத்திலிருந்து வெளியேற்றப்பட்ட திகதியான மாசி 7ம் திகதியிலிருந்து அவர் பதவி நீக்கம் செய்யப் பட்டிருக்கிருர். ஜனுதிபதி அலுவலகத்திலிருந்து வெளியிடப பட்ட அறிக்கை வெறுமனே ஒரு வரியை மட்டுமே கொண்டிருந்தது. லீவில் அனுப்பப் பட்டிருந்த கொத்தலாவலேயை அழைத்த இராணுவத் தளபதி அவருக்கு ஜனுதிபதியின் முடிவைத் தெரிவித்தார்.

முன்பு ஹமில்டன் வணசிங்க பதவியில் இருந்த போது நவம்பர் 91 இல் கொத்தலாவலே மீதான குற்றச்சாட்டுக்கள் காரணமாக அவர் பதவியை ராஜிஞமா செய்ய வேண்டும் அல்லது இளேப்பாற வேண்டும் என்று பரிந்துரை செய்து பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்கவிற்கு அறிவித்திருந்தார். இது பிரேமதாசாவிற்கு பாரப்படுத்தப்பட்ட போது அவர் கொத்தலாவலே மேஜர் பதவி முடிந்ததும் இளேப்பாற வேண்டும் என்று முடிவு செய்திருந்தார்.

ஆனுல் சிசில் வைத்தியரத்தின தளபதியாக பதவியேற்றதும் கொத்தலாவலேக்கு மேஜர் பதவியில் இரண்டு வருடம் நீடிக்கப்பட வேண்டும் என்று சிபார்சு செய்ததுடன் அவருக்கு லெப்டினன்ட் கேணலாக பதவி உயர்வும் வழங்கியிருந்தார். இதன் பின்னரே கொத்தலாவலே அமெரிக்க பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

அங்கு திருடியதாக குற்றம் சாட்டப்பட்ட பின்னர் அந்த விற்பனே நிலேயத்தின் பாதுகாப்பு வீடியோப் பிரதி இலங்கைக்கு அனுப்பப்பட்டதாகவும் அதன் பின்னரே இவரை பதவி நீக்குவது பற்றி உயர் மட்டங்கள் ஜனுதிபதிக்கு சிபார்சு செய்ததாகவும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தற்போது சி.ஐ.டி அதிகாரிகளும் இராணுவப் பொலிசாரும் கொத்தலாவலே வீட்டிற்கு சென்று அங்கிருந்த இராணுவத்திற்கு சொந்தமான பொருட்களே அப்புறப்படுத்தினர்.

இந்த விடயத்தில் ஐலண்ட் பத்திரிகையும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையும் மோதிக் கொண்டுள்ளன.

## சமாதான முயற்சி...

90ம் ஆண்டு முதல் உள்ள இந்த தடை மன்னுர் முதல் திருமலே வரை அமுலில் உள்ளது. மீனவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த தடை நீக்கப்படுவதாகவும் கூறப்பட்ட போதிலும் யாழ்ப்பாணம் சென்ற தூதுக்குழுக்களிடம் அரசாங்கம் சமாதானத்துக்கான சமிக்ஞைகளே வெளியிட வேண்டும் என்று புலிகள் தெரிவித்ததன் விளேவே இது என்று கூறப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனேத் திணேக்களமும் யாழ்ப்பாணத்துக்கான உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்களே அதிகளவில் அனுப்புவதாக கூறியுள்ளது. தமிழ் மக்கள் படும் கடுந்துயர் பற்றி தாங்கள் அறிந்துள்ளதாகவும் தேவையான பொருட்களே அனுப்புவதன் மூலம் அவற்றின் விலேயைக் குறையச் செய்வதே தமது நோக்கம் என்று திணேக்களத்தின் தலேவர் யசீம் தெரிவித்திருக்கிருர்.

வவுனியாவில் திணேக்களம் மொத்த விற்பனே நிலேயம் ஒன்றை திறக்கவுள்ளது என்றும் இதனுல் வியாபாரிகள் கொழும்பு வந்து அலேயத் தேவையில்லே என்றும் யசீம் மேலும் தெரிவித்தார்.

புலிகள் குடாநாட்டுக்கு வெளியே பேச்சுவார்த்தைகள் நடத்த மறுத்துவிட்டதாகவும் பேச்சுவார்த்தைக்கு குடாநாட்டுக்குவரும் எவரையும் வரவேற்கத் தயார் என்று தெரிவித்ததாகவும் ஆயரின் பிரதிநிதி தெரிவித்தார்.

# அமெரிக்காவில் அடிமையான இலங்கைப் பணிப்பெண்

அமெரிக்காவில் இலங்கைப் பணிப்பெண் ஒருவரை கொத்தடிமை போன்று நடத்திய குற்றச்சாட்டில் குவைத் தம்பதிகள் மீது விசாரணேகள் நடைபெறுகின்றன. பொஸ்டனில் நடைபெறும் இந்த வழக்கில் வசந்தா கெதர என்ற 27 வயது பணிப்பெண் நீண்ட நேரங்களுக்கு கடுமையான சூழலில் சம்பளம் குறைவாக வேலே செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணே நிலத்தில் படுக்குமாறு வற்புறுத்தியதுடன் இவரை எந்த தளபாடங்களிலும் உட்காரக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. வேலே செய்யாத போது சமையலறையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்க வேண்டும் என்றதுடன் இவருக்கு பாணும் நீருமே கொடுக்கப்பட்டது. அத்துடன் இவரது பாஸ்போட் பறிக்கப்பட்டதுடன் வீட்டைவிட்டு வெளியே சென்ருல் பொலிசார் சுடுவார்கள் என்றும் அந்த தம்பதிகள் மிரட்டியிருக்கிருர்கள். 92 டிசம்பர் மாதம் இந்த தம்பதிகளின் மகன் சுகவீனமுற்ற போது பார்வையிடச் சென்ற தாதிகள் இந்தப் பெண்ணின் நிலே குறித்து பொலிசாருக்கு அறிவித்தனர். பொஸ்டன் பல்கலேக்கழகத்தில் பயிலும் கணவனும் அவரது மனேவியும் இந்தக் குற்றச்சாட்டுக்களே

4ம் பக்கம் பார்க்க..

# கிளாலிக்கடலில் விமானத் தாக்குதல்
# முப்பது பேரைக் காணவில்லை

கிளாலிக் கடலில் மக்கள் சென்ற படகுகள் மீது விமானப்படை தாக்கியதில் முப்பது பேர் வரை காணுமல் போனதாக முதலில் செய்தி வந்திருந்தது. இந்த தாக்குதல்கள் காட்டுமிராண்டித்தனமானவை என்று புலிகள் கண்டித்துள்ளனர். கடந்த சனிக்கிழமை கிளாலிக் கடலில் அப்பாவி மக்களைக் கொண்டு சென்ற படகுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் காட்டுமிராண்டித் தனமானது என்று லண்டனில் உள்ள அலுவலகத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் புலிகள் தெரிவித்திருக்கிருர்கள். 'ஆயுத யுத்தம் ஒன்றில் மனிதாபிமானச் சட்டங்களை மீறிய செயல்' என்று இதை வர்ணித்துள்ளனர்.

குடாநாட்டிலிருந்து பெரு நிலப் பகுதிக்கு எழுபது படகுகள் சென்றதாகவும் அப்போது விமானங்கள் தாக்கியதாகவும் இருளில் பயப் பீதி காரணமாக நடந்த களேபரத்தில் இரு படகுகள் காணுமல் போனதாகவும் அதில் ஒன்றில் படகுச் சொந்தக்காரர் மட்டுமேதிரும்பி வந்ததாகவும் மற்ற வள்ளத்தைக் காணவில்லை என்றும் தப்பி வந்தவர்கள் வெளிநாட்டுச் செய்தியாரிடம் தெரிவித்திருந்தனர். தாக்குதல் நடந்த போது மக்கள் கூக்குரலிட்டு சிலர் கடலுள் பாய்ந்ததாகவும் மற்றவர்கள் படகில் படுத்துக் கொண்டே பிரார்த்தித்ததாகவும் தப்பி வவுனியா வந்த ஒரு பெண் தெரிவித்தார். பல வள்ளங்கள் திரும்பி யாழ்ப்பாணக் கரைக்கு சென்றன. தாக்குதலில் ஈடுபட்ட அதே விமானங்கள் வள்ள இறங்குதுறையில் தாக்குதல் நடத்தியதில் பத்துப் பேர் வரை காயமடைந்தனர்.

ஆனல் தங்கள் கண்காணிப்பு ஹெலிகொப்டர் ஒன்றுக்கு அப்பகுதியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதனுலேயே திருப்பித் தாக்கியதாகவும் அத்துடன் அப்பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தும்படி இராணுவத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## புதுடெல்லியில் பத்திரிகையாளர் வேலைநிறுத்தம்

இந்திய பட்ஜட் தினச் செய்திகள் வெளிவரும் தினத்தன்று புதுடெல்லியில் பத்திரிகையாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனுல் பல ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவரவில்லை. இந்த தினத்தில் வேலை நிறுத்தம் செய்வதன் மூலம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்று கருதியே பத்திரிகையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றத்தில் பார்வையாளர் பகுதியில் பத்திரிகையாளர்கள் இருந்த போதும் ஒருவரும் அது பற்றி எழுதவில்லை. பிரஸ் ட்ரஸ்ட் ஒஃப் இந்தியா, யுனேட்டட் நியூஸ் ஒஃப் இந்தியா ஆகிய இரு நிறுவனங்களின் பத்திரிகையாளர்கள் தொழிற்பட்ட போதும் அவர்கள் ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## மெக்சிக்கோவில் இந்தியர் கைது

மெக்சிக்கோவில் சட்ட விரோதமாக இறங்கிய இந்தியர்கள் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அமெரிக்காவிற்குள் நுழைவதற்காக மெக்சிக்கோ வந்த இவர்கள் நிலக்கீழ் கழிவு வாய்க்கால் ஒன்றினுள் பதுங்கி இருந்த போது பிடிக்கப்பட்டனர். இந்தியா, பங்களாதேஷ் பகுதிகளைச் சேர்ந்த இவர்களை கடத்தல்காரர்கள் கூட்டிச் செல்வதற்காக வாய்க்காலினுள் தங்க வைத்திருந்தனர். 35 இந்தியர்களும் ஒரு பங்களாதேஷியும் குவேரொரோ மாநிலத்தில் தலபில்ல என்ற இடத்தில் கைது செய்யப்பட்டனர்.

## கனடாவில் தமிழ் அகதிகள் அதிகரிப்பு

கடந்த வருடம் கனடாவிற்கு வந்த அகதிகளில் இலங்கையரே அதிகளவில் உள்ளனர். சென்ற வருடம் 14101 பேருக்கு தஞ்சம் வழங்கப்பட்டது. இது 92ம்

*ம.ப.பார்..*

## இந்திநிகழ்ச்சிகளுக்கு தி.மு.க எதிர்ப்பு

இந்தியாவில் தூரதர்ஷன் தொலைக்காட்சியில் ஹிந்தி நிகழ்ச்சிகள் அதிகளவில் ஒளிபரப்பப்படுவதை ஆட்சேபித்து தமிழ் நாட்டில் தண்டவாளத்தில் ஆர்ப்பாட்டம் செய்ததால் தமிழ் நாட்டு புகையிரதச் சேவைகள் ஸ்தம்பித்தன. தி.மு.க இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. பன்னிரண்டு மணி நேர ஆர்ப்பாட்டம் வெற்றி பெற்றதாக தி.மு.க தெரிவித்தது.

## இந்திய பாதுகாப்பு செலவீனம் அதிகரிப்பு

சமீபத்திய இந்திய வரவு செலவுத் திட்டத்தின் போது இந்தியா தனது பாதுகாப்புச் செலவீனங்களை எட்டு வீதத்தால் அதிகரித்திருக்கிறது. அத்துடன் இறக்குமதி சுங்கத் தீர்வைகள் குறைக்கப்பட்டதுடன் வட்டி வீதமும் குறைக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புக்காக இந்தியா 230 பில்லியன் ரூபாய்களை அதிகமாகச் செலவிட உள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தல்...

துப்பாக்கிப் பிரயோகம் செய்து வாக்காளர்களை விரட்டியதாகவும் திருமலையில் ஐ.தே.க ஆதரவாளர்களுக்கும் இன்னொரு எதிர்க்குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற மோதல் காரணமாக கடற்படையினர் வாக்குப் பெட்டிகளை அகற்றியதாகவும் கூறப்படுகிறது. ஏருவூரில் ஐ.தே.க குண்டர்கள் வானத்தை நோக்கிச் சுட்டு, வாக்காளர்களை விரட்டியதுடன் துப்பாக்கி முனையில் தேர்தல் அதிகாரிகளை மிரட்டி வாக்குச் சீட்டுக்களைக் கடத்திச் சென்றனர் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான ஹிஸ்புல்லா தெரிவித்தார். இதன் பின்னர் ஐ.தே.க குண்டர்கள் ஆறு வாக்குச்சாவடிகளில் ஐ.தே. கட்சிக்கு வாக்களித்த சீட்டுக்களை திணித்துள்ளனர். இதைப் போல காத்தான்குடியிலும் நிகழ்ந்ததுடன் தேர்தல் அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். இது குறித்து தேர்தல் ஆணையாளருக்கு ஹிஸ்புல்லா புகார் செய்ததுடன் இதுகுறித்துவிசாரணை செய்வதாக ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

மதகு ஒன்று தகர்க்கப்பட்டதுடன் சில இடங்களில் குண்டு வெடிப்புகளும் நிகழ்ந்தன. இது தவிர தேர்தலைக் குழப்பும் முயற்சிகளில் புலிகள் பெருமளவில் ஈடுபடவில்லை.

தேர்தலுக்காக ஐயாயிரம் பொலிசார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். திருமலையில் வாக்குச்சாவடிகளுக்குள் ஒரு இராணுவத்தினர் கூட இல்லை என்றும் பொலிசாரை கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் பிரிகேடியர் சிறி பீரிஸ் தெரிவித்தார். சுமார் 500 யார் தொலைவுக்கு அப்பாலேயே இராணுவத்தினர் நின்றிருந்தனர். விமானப்படை வாக்களித்த பகுதிகளில் ரோந்துகளில் ஈடுபட்டிருந்தது.

தேர்தல்களில் ஐ.தே.கட்சி 18 சபைகளிலும் தமிழ் குழுக்கள் 13 சபைகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் ஆறு சபைகளிலும் சுதந்திரக்கட்சி மூன்று சபைகளிலும் வெற்றி பெற்றுள்ளனர். ஆயினும் ஐ.தே. கட்சி ஒரு மாநகரசபையிலும் மூன்று நகரசபைகளிலுமே வெற்றி பெற்றது.

வவுனியாவில் புளொட் 7 ஸ்தானங்களையும் ஐ.தே.க மூன்று ஸ்தானங்களையும் பெற்றுள்ளன. இது குறித்து கருத்து தெரிவித்த ராஜமனோகரி புலேந்திரன் 'யார் வெற்றி பெற்றார்கள் என்பது பிரச்சனை அல்ல, தேர்தலை நடத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறி விட்டது' என்று கூறியுள்ளார்.

திருமலையில் புளொட் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த தேர்தலில் சிங்களப் பகுதிகளில் ஐ.தே.க, சுதந்திரக் கட்சியும் முஸ்லிம்கள் வாழும் பகுதியில் முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் பகுதிகளில் தமிழ் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

## கனடாவில்...

ஆண்டில் 17 ஆயிரமாகவும் 91 இல் 19 ஆயிரமாகவும் இருந்தது.

சென்ற வருடம் கனடா வந்தவர்களில் 3725 பேர் இலங்கையர்கள். 2229 பேர் சோமாலியர்கள். ஈரானியர்கள் 800 பேர் கனடா வந்திருந்தனர்.

## கற்பழிப்புக் குற்றச்சாட்டில் இரண்டு புலிகளுக்கு மரண தண்டனை

கற்பழித்த குற்றச்சாட்டில் இரண்டு புலி உறுப்பினர்களுக்கு புலிகள் இயக்கம் மரண தண்டனை விதித்துள்ளது. ஓமந்தையில் வைத்து கற்பழித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டதை அடுத்து இரண்டு புலிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாக ஜேர்மன் செய்தித் தாபன செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை பகிரங்கமாக இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பிரதேசப் பொறுப்பாளரான கண்ணன், அவரது மெய்பாதுகாவலரான மோகன் ஆகியோர் இரண்டு பெண்களைக் கற்பழித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

## அமெரிக்காவில்..

மறுத்துள்ளனர். கெதர தங்களைப் பாவித்து அமெரிக்காவில் தஞ்சம் கோருகிறார் என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குற்றவாளிகளாகக் காணப்படும் பட்சத்தில் இவர்களுக்கு பத்து வருடச் சிறையும் ஐந்து லட்சம் அபராதமும் விதிக்கப்படுவதுடன் நாடு கடத்தப்படவும் கூடும்.

---

**திருமதி ரஜினி திரணகம**

**திரு றிச்சாட் டி சொய்சா**

**நினைவாக நினைவுக் கலந்துரையாடல்**

**5.3.94 சனிக்கிழமை மாலை 5.30 மணி**

**தேடகம் மேற்தளம்**
**566 பாராளுமன்றவீதி**
**(வெலஸ்லி/பார்லிமெண்ட்)**

# NOTICE TO TOBACCO RETAILERS

## On February 8, 1994, the *Tobacco Sales to Young Persons Act* came into force.

This federal legislation

- **raises the minimum legal age of persons to whom tobacco products can be sold from 16 to 18 years**
- **restricts the location of cigarette vending machines to bars, taverns and similar beverage rooms**
- **increases the penalty for selling tobacco to young persons from $100 to a maximum of up to $50,000 for repeated offences.**

| | |
|---|---|
| **It is prohibited by federal law to provide tobacco products to persons under 18 years of age.** | **Il est interdit par la loi fédérale de fournir des produits du tabac aux personnes âgées de moins de 18 ans.** |

If you sell tobacco on your premises, you are obliged, under the *Tobacco Sales to Young Persons Act*, to display a sign containing the message shown here.

A full-size, colour sign and a letter explainin your obligations as a tobacco retailer will b sent to you soon by Health Canada.

Check with your province for any additional laws regarding the sale of tobacco products to young persons.


If you do not receive an information package by March 15 or if you want further information on the *Tobacco Sales to Young Persons Act*, please call

**1-800-263-9004.**

Health Canada Santé Canada

Canada

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

**பரீட்சித்துப் பாருங்கள்**

**Try First**

பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!

## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலே பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றவையும் கிடைக்கும்.




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால்குடிக்கும்குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது. எளிதில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

# மரண அறிவித்தல்

## உத்திரமணி (ருக்மணி)



**தோற்றம்**
**17.1.1904**

**மறைவு**
**23.2.1994**

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய குடும்பத்தைச் சேர்ந்த உத்திரமணி (ருக்மணி) அவர்கள் 23.2.1994ல் யாழ்ப்பாணம் தாவடியில் காலமானார். இவர் தாவடி கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் குகேந்திரபதி, ஜெயமணிதேவி, கமலேந்திரன், ஞானேந்திரன் (பிரான்ஸ்), கருணேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாவதி, காலம் சென்ற ரி.பி.பத்மநாதன், அன்னலட்சுமி, விக்னேஸ்வரி (சாந்தா) ஆகியோரின் மாமியாரும் காலம் சென்ற சுவாமிநாதன், காலம் சென்ற ரெட்ணநாதன், காலம் சென்ற திருநேத்திரவல்லி, அன்னலட்சுமி, காலம் சென்ற திருநாவுக்கரசு, சாரதாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரலட்சுமி, முரளி (பிரான்ஸ்) பிறேமிளா (சுவிஸ்) பிரேமானந்த் (கொழும்பு) பத்மஜெயந்த் (பிரான்ஸ்) தாரணி, நிஸானி, சுபேந்திரா ஆகியோரின் பாட்டியும் ஜெயந்தா, யுசோதா, ராகுலன், ஜசிந்தா ஆகியோரின் பூட்டியுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் தாவடியில் நடைபெற்றது.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு
செல்வம் 865 1264
செந்தில் 531 7701
கருணா 516 0202

# அன்ரனி பிறதர்ஸ்

## மாபெரும் மலிவு விற்பனை

**பெப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை**

**1484 Queen West (at Jameson)**

**Tel:588 3447**

***இறைச்சி வகைகள்***
ஆட்டிறைச்சி றாத் $2.49
மாட்டிறைச்சி றாத் $2.49
(எலும்புகள் இல்லாமல்)
உயிர்க்கோழி $2.50
கோழிக்கால் றாத் $.79

***பருப்பு வகைகள்***
மைசூர்ப்பருப்பு, கடலைப்பருப்பு,
துவரம்பருப்பு, உழுந்து, கடலை,
ரவை
றாத் 69 சதங்கள் மட்டுமே

***மீன் வகைகள் றாத்***
பாரை $1.99
திரளி $1.99
கணவாய் $2.99
சீலா $2.49
King Fish $3.99

***சவர்க்கார வகைகள்***
ராணி, லக்ஸ், கோம்பா, லைவ்
போய்
$2 டொலருக்கு நான்கு

***மரக்கறி வகைகள்***
கத்தரிக்காய்,பாவற்காய்,
பயிற்றங்காய் $1.29 றாத்
வெங்காயம் $2.49 10 றாத்

கடுகு, பெருஞ்சீரகம், வெந்தயம்
.99 200 கிராம்
ஜாம்வகைகள் $1.49
ஹோமோ பால் 2 வீதம் $2.99
தயிர் 750 மிலீ $1.59
முட்டை XL $1.69
டின்பால் பிளாக் & வைட் $1.99

***உங்கள் வதிவிடங்களில் பூச்சித் தொல்லையை அறவே ஒழிக்க எங்களை நாடுங்கள்***

***சகல சுவாமிப் படங்களும் ஐம்பது வீத மலிவு விலையில் கிடைக்கும்***

## ANTONY BROTHERS FASHION HOUSE

***1484 Queen St West***

**Tel:588 3447**

**Feb 15-Mar 15**

***Audio [illegible] ¢99 ........ ~~$1.99~~***
***Video [illegible] $2.79......... ~~$3.99~~***
***Ladi[illegible] $ 9.99........ ~~$14.99~~***
***Single [illegible]ck $11.99 .......... ~~14.99~~***
***Dou[illegible]lock $17.00 .......... ~~24.99~~***
***C[illegible]rt Clock $29.99 ........ ~~39.99~~***

# புருஷ வீதிகள்

ந.சுசீந்திரன்
நன்றி:அஆஇ சிறுகதைத் தொகுப்பு

சோசல் காசு கிடைத்ததும் இரண்டு வைன் போத்தல் வாங்கிக் கொண்டேன். தனியாகக் குடிப்பதில் சுவாரஷியம் இருக்காது.

நான் முன்பிருந்த வேலையில்லா தோர் விடுதிக்கு பஸ் எடுத்துப் புறப்பட்டேன். அங்கே தோமஸ் குப்புறப் படுத்துக் கிடந்தான். முதன்நாட் குடியின் மறுநாளைய மயக்கத்தில் இருந்து அவன் இன்னும் மீளவில்லை. இந்த அதிகாலையில் குடிக்கவும் அவன் மறுத்து விட்டான்.

பக்கத்து அறையைத் தட்டினேன். அவள் இருந்தாள், கூடவே அவள் சினேகிதியும். எனது ஜக்கட்டுக்குள் இருந்து இரண்டு வைன் போத்தலையும் வெளியே எடுத்து வைத்ததும் அவர்கள் சந்தோசப்பட்டிருக்க வேண்டும். இருவரும் ஏற்கனவே குடித்து விட்டிருந்தார்கள். நான் கொண்டு சென்ற போத்தலை மூவரும் பங்கிட்டோம்.

ஒருத்தி அழுதாள். ஏன் அழுகிறாள் என்பது புரியவில்லை குழந்தை, சிநேகிதன், பணம், உபாதை பயம் இவற்றில் ஒன்றோ பலவோ மையக் காரணமாக இருக்கலாம்.

குழந்தை பற்றியதாக இருக்க வேண்டுமென்று எடுத்துக் கொண்டேன்.

எனக்குத் தமிழைத் தவிர எந்த மொழியும் தெரியாவிட்டாலும், ஏதோவொரு மொழியை நாம் பேசுகிறோம்.

இங்கு வந்த சிறிது நேரத்துக்குள் இந்த சிநேகிதியின் நிர்வாண உருவம் தான் என் மனதுக்குள், அவளோடு உறவு கொள்வதற்கான என் விருப்பத்தின் வெளிப்பாடுகளும், பிராயத்தனங்களும் இங்கு வந்தவுடனேயே தொடங்கி விட்டன.

அவளும் இசைந்து கொண்டாலும் குடிப்பதை இன்னும் நிறுத்தவில்லை.

இந்த இடம் சரியில்லை, எனக்குத் தெரிந்த இடம் நகரில் இருக்கிறது, அங்கு போவோம்" என்றாள்.

நகரத்தின் ஜனவெள்ளத்தில் கரைந்து, விரிந்து போய்க் கிடக்கின்றன. விலா எலும்புக் கட்டிடக் கோபுரங்களுக்கு முன்னாலும் பின்னாலும் மூத்திரச் சுவர்களின் ஒதுக்குப் புற வெளிகளில் எல்லாம் நாங்கள் அறிந்த முகங்கள்.

அவளால் நடக்க முடியவில்லை, தாங்கலாகப் பிடித்துக் கொண்டு நின்றேன்.

கையில் இருக்கும் வைன் போத்தலை மட்டும் பிடித்துக் குடிக்கிறாள். அதை வாங்கி அப்பால் எறிந்தேன். இனி அவளால் நடக்கமுடியாது. நான் விட்டால் விழுந்து விடுவாள்.

இடையே என் மனைவி குழந்தை தென்படுகின்றனர். கொழும்பின் சகதித் தெருவொன்றின் குடிசைக்குள்....

சின்ன வயது: இயற்கை கொலுவிருக்கும் எங்கள் கிராமம்: முத்து முத்துக் கனவுகளில் நூறு வருடங்கள் நான் வாழ்ந்தேன், காலம் என்னோடு சேர்ந்து வர மறுத்து விட்டது. நீங்கள் காலத்தோடு கணக்கிட்டால் நான் வாழ்ந்தது சில வருடங்கள், நானே நூறு, இன்னும் இன்னும் அதிகம் வாழ்ந்துவிட்டேன். போதும்என்ற நிறைவு என்னிடத்தில் இல்லை. என் மனைவியை எவ்வாறு பழிவாங்குவது? எத்தனை சந்தர்ப்பங்களில் அவள் என்னை மட்டந் தட்டியிருப்பாள், நான் உடைந்தேன் உருக்குலைந்தேன் என்னுள் இப்போ எதுவும் இல்லை சில கேள்விகள்?

நான் வாழ்ந்தேனோ? வாழ்கிறேனோ? எதற்காக? எவ்வாறு? யாரிடம் எதற்கு நான் என்ன எதிர் பார்க்கிறேன்? என்னை ஆழங்களைப் பற்றி அறியவும் வாய்ப்பின்றி எதுவும் புரியாமல் நட்ட நடுத்தெருவில் நடுநிசியில் நிரந்தரமாக்கி சூனியப் பிரதேசம் கழன்று என்னை எங்கே கொண்டு செல்லப் போகிறது?

உங்களோடு ஏன் வந்து உறவு கொண்டேன்? நான் உறவு கொண்டால், என்னை ஏன் உங்கள் உலகிற்காக உருமாற்றம் செய்தீர்கள்? விடுதலையும் தருவதில்லை, விடியவும் விடுவதில்லை, ஏன் இந்த மூர்க்கவதை! வதைக்கும் உலகில் உங்கள், உலகில் உறவு உண்மை, வாழ்வு மரணம், பிறப்பு இவையெல்லாம் என்ன கருத்தைக் கொடுக்கிறது?

ஆயிரம் மனிதர்கள் எங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தார்கள். எங்கிருந்து வந்தது எனக்கிந்த வல்லமை! அவளை எப்படியோ நகர்த்தி இரண்டொரு வீடு தள்ளி வீதியோரத்தில் கிடத்தினேன், அது ஒரு வீட்டின் கதவோரம் ஆடைகளைக் கழற்ற முடியவில்லை. கிழித்தேன்....

ஜன்னல் வழியாக ஒருவன் பெரிதாக சத்தம் போடுகிறானா?

இப்போது என் ஆசையின் வெறி தீர்கிறது. உலகைப் பொசுக்கும் உணர்வு போய்விட்டது. நான் மனிதனல்ல என்று மட்டும் நினைத்துக் கொண்டேன். மனிதர்கள் சத்தம் போடுவது இப்போது கேட்கிறது.. எங்களைச் சுற்றி பொலிஸ் வாகனங்களும், கொஞ்சம் மனிதர்களும்... அவள் நிலத்தின் குளிரில் விறைத்துப் போய்விட்டாள். விறைத்த அவளது உடலை வாகனத்தில் ஏற்றுகிறார்கள்.

"உனக்கு அடிக்கவேணும் ஆனால்.. ." என்று ஒரு பொலிஸ்.. என்னை அந்தப் பொலிஸ்காரர்கள் துரத்திவிட்டார்கள்.

அவள் இறந்திருக்கமாட்டாள்.

# ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# தீர்க்கதரிசனம்



அன்னலிங்கத்துக்கு தனது றூமில் வாழும் பரமலிங்கம் மீது பலத்த சந்தேகம். இத்தனைக்கும் பரமலிங்கம்தான் அங்கே சமறியை இழுத்தடிக்காமல் கட்டும் ஓர் ஜல்லிக்கட்டுக்காளை. அங்கு வாழும் ஏனைய ஜல்லிக்கட்டுக்காளைகளோ செக் மாறவில்லை, செக் மாறவில்லை என மாதக் கணக்கில் இழுத்தடித்தே சமறியைக் கட்டும் பண்பாட்டை ஐயம் திரிபறக் கற்றவர்கள். முறைப்படி பார்த்தால் இவர்கள் மீதுதான் அன்னலிங்கத்துக்கு ஆத்திரம் வரவேண்டும். பிறகேன் பரமலிங்கம் மீது ஆத்திரம் வந்ததாம்?

விஷயம் இதுதான். ரெண்டு மாதங்களின் முன்னர் தான் அன்னலிங்கம் அல்லியை வீட்டில் இருந்து இறக்குமதி செய்து மேளதாளங்களுடன் கலியாணம் செய்தான். இந்தக் கலியாணத்தின் போது, பரமலிங்கம், ஓர் வெள்ளைச் சேலையைப் பரிசாகக் கொடுத்ததால்தான் அன்னலிங்கத்துக்குப் பிரச்சனையே ஏற்பட்டது. அவன் ஒன்றும் சேலை மகத்துவம் தெரியாத விசரனல்லன். பேச்சுவார்த்தை சரி வந்ததும், அவன் முதலில் வாங்கியது, மையொட்டித்தாளின் தரத்தினையொத்த ஓர் வெள்ளைச் சேலையே. பரமலிங்கம் வெள்ளைச் சேலையைப் பரிசாக விளங்கியதன் அர்த்தம், அவன் அல்லி மீது ஓர் கண் வைத்துள்ளான் என்பதாகவே அன்னலிங்கத்துக்கு பட்டது. ஏனைய ஜல்லிக் கட்டுக் காளைகள் அல்லியை "அக்கா" என அழைக்கையில் பரமலிங்கம் மட்டும் "அல்லி" "அல்லி" என உரிமையுடன் அழைப்பதைப் போல அழைத்தால் அன்னலிங்கத்திக்கு விசர் வருமா விசர் வராதா?

அல்லிக்கும், பரமலிங்கத்துக்குமிடையே ஏதோ கள்ளத் தொடர்பு உண்டெனச் சந்தேகித்த அன்னலிங்கம் தனது தூக்கத்தைத் தியாகம் செய்தான். வழமையாக, வேலை முடிந்து வந்ததும், விழுங்கிவிட்டு சமறி விவகாரங்களைப் பார்த்து விட்டுக் குறட்டை விடும் இவன், இப்போதோ, விழுங்கி விட்டு வீடியோவுக்கு முன்னால் வந்து குந்துவான். ஏனைய காளைகள் காட்ஸ் விளையாடிக் கொண்டிருக்க பரமலிங்கம் மட்டும் வீடியோ பார்க்க அன்னலிங்கத்துக்கு அருகில் வருவான், குசினிக்குள் ஒழித்திருந்து சாப்பிடும் அல்லியைக் களவாகப் பார்க்கவே அவள் தன்னருகில் வந்திருப்பான் என்பது அன்னலிங்கத்தின் கண்டுபிடிப்பு.

ஒருநாள், பிரச்சனைக்குத் தீர்வு கண்டு விடுவதென அன்னலிங்கம் முடிவெடுத்தான். காளைகள் எவருமே இல்லாத தருணமாகப் பார்த்து அல்லியிடம் "பரமலிங்கம் எப்பயாவது உன்னைப் பார்த்துக் கண்ணைக் கிண்ணை அடிச்சவனே?" என்று கேட்டான்.

"அவரை நிமிர்ந்து பார்த்தாத்தானே கண்ணடிச்சவரோ எண்டதைச் சொல்லலாம். நிமிர்ந்து பார்த்திட்டுச் சொல்லட்டே?" என அல்லி கேட்டதும் அன்னலிங்கம் நடுங்கி விட்டான்.

"உன்ரை குனிஞ்ச தலை நிமிராம இருக்கிறது தான் உன்ரை கற்புக்கும் நல்லது. தமிழ்ப் பண்பாட்டின்ரை கற்புக்கும் நல்லது" என அல்லிக்கு ஆசி வழங்கிய அன்னலிங்கம், அடுத்த நாள் பரமலிங்கத்தைத் தனியாக பேட்டி கண்டார்.

"பரமு, கேட்கிறன் எண்டு குறை நினைக்காதை. ஏன் என்ரை கலியாணத்துக்கு நீ வெள்ளைச் சேலையைப் பரிசாத் தந்தனி?" பரமன் பதில் சொல்ல இழுத்தடிக்கவில்லை.

"அண்ணை, நீங்கள் ஒன்பது சீட்டு நடத்திறியள், பல சோலிக்காரர், உந்தச் சோலியளாலை வெள்ளைச் சீலை வாங்க மறந்திடுவியளோ எண்டு நினைச்சுத்தான் அதை வாங்கினான்."

பரமலிங்கத்தின் "நல்ல உள்ளத்தைப்" புரியாமல் சந்தேகித்து விட்டாமே எனத் தனக்குள் வருந்திய அன்னலிங்கம், "இந்த மாதம் நீர் சமறி கட்டத் தேவையில்லை" என்றான். பரமலிங்கத்துக்கு இது புதிரையூட்டிய போதுமே வியாக்கியானம் எதையுமே கேட்காது விட்டான்.


கிறிஸ்தவ திருமணங்களில் மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை, அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள

ராஜி

796 2672

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்

Net, Colorful Flower Bouquet, Flower Basket

## பென் சூரியனின் குட்டிக்கதைகள்

# சோதிடம் பொய்யாகுமா?

தண்டாயுதபாணிக்கு ஏன் இன்னமும் கலியாணம் நடக்கவில்லை என்று கேட்டீர்கள் என்றால்.... நீங்கள் விஞ்ஞானம் படிக்கவில்லை என்று அர்த்தம். பள்ளிக் கூடக் காலத்திலேயே பக்கத்திலிருந்த பாஞ்சாலியின் மேல் காதல் வந்தும், அவள் பிறந்த திகதியின் கூட்டெண் நாலாக இருந்ததால் தனது ஒரு தலைக்காதலை வேரோடு பிடுங்கி எறிந்தவன் பாணி. அந்த நேரமே மித்திரனில் வந்த எண் சோதிடத்தை வெட்டி கொப்பியில் ஒட்டி வைத்திருந்தவன் அவன். பள்ளிக் கூடத்தில் விஞ்ஞானம் படித்தானோ என்னவோ, சோதிட விஞ்ஞானத்தில் அவனுக்கு பெரிய ஆர்வம். அதிலும் திருமணம் செய்யும் போது சகல அம்சங்களும் பொருந்தி வராவிட்டால் அது குடும்ப வாழ்வுக்கு கூடாது என்பது அவன் தன் முன்னோரிடம் இருந்து கற்ற விடயம். அதுவும் பொருத்தத்தில் யோனிப் பொருத்தம் என்பது முக்கியமானது என்று யாரோ சொன்னதைக் கேட்ட நாளிலிருந்து தனது குறிப்பில் தனக்கு ஆண் குரங்கு என்றிருந்ததிலிருந்து அவன் பெண் குரங்கு ஒன்றுக்கே தாலி கட்டுவதாக சபதம் செய்திருந்தான்.

பக்கத்து வீட்டிலிருந்த பாரதி இவனுக்கு கண்ணை வீசி மயக்க முயன்ற போது, உன்ரை சாதகத்தை தாறியோ என்று கேட்டு அவளது முற்றுகையை முறியடித்தவன் பாணி. இப்படியாகப் பட்ட பாணியின் சாதகம் காலப் போக்கில் சாத்திரிமார், தரகர்மாரின் கைகளில் தவழத் தொடங்கிற்று. எத்தனையோ பொருத்தங்கள் வந்த போதும் பெண் குரங்குகள் அகப்படாததால் தனது வீரசபதத்தை பாணியால் நிறைவேற்ற முடியவில்லை. எல்லாம் செவ்வாயும் சனியன்களுமாகவே அகப்பட்டன. அதை விட கரடி, புலி, மான், நாய்களும் அகப்பட்டன.

சாத்திரத் தொழிலுடன் பகுதி நேரமாக தரகு வேலையும் பார்க்கின்ற சோதிடக் கலாநிதி சோதிநாதன் எங்கோ ஒரு பெண் குரங்கைப் பிடித்து, ஒரு மாதிரி பாணியின் தலையில் கட்டி விட்டார். சோதிடப் பொருத்தத்துடன் சீதனப் பொருத்தமும் சேர்ந்ததுடன் பாணி எதிர்பார்த்தபடியே அழகும் இருந்ததால் பாணி இவ்வளவு காலமும் வெயிட் பண்ணியதற்கு பலன் கிடைத்தது என்று புளகாங்கிதம் அடைந்தான்.

கொஞ்ச நாளாக குரங்குகள் ஈருடல் ஓருயிராக இன்பம் துய்த்தன. கொஞ்ச நாளில் பாணியின் சுயரூபம் வெளிப்பட்டது. வேதாளக் குரங்கு மரத்தில் ஏறியது. மற்றவர்களுடன் மனைவி சோஷலாகப் பழகுவது பாணிக்கு பிடிக்கவில்லை. மெதுவாக பிரச்சனையைக் கிளப்பினான். அடி, உதை என்று தொடங்கி பொலிஸ் வந்து கோட் வரை போய் மணம் முறிந்தது.

அப்போது பொருத்தம் பார்த்த போது விருட்சம் பொருந்தவில்லை என்றும் இதுவே தனது பிரிவுக்கு காரணம் என்றும் கண்டுபிடித்த பாணி 'சில வேளைகளில் ஜோதிடர்கள் பொய்க்கலாம், ஆனால் ஜோதிடம் ஒரு நாளும் பொய்க்காது' என்றபடி தனக்காக 'வேப்ப மரத்துக் குரங்கு' ஒன்றைத் தேடிக் கொண்டுள்ளான்.

## கறை படிந்த..

சுதந்திரமாக இருப்பது தான்
எத்தனை விசித்திரமானது, அது
என்னை மயக்க வைக்கின்றது.
மற்றவர்களை தொடாமல்
எவ்வாறு கதைப்பது என்று,
நான் மீண்டும் கற்றுக் கொள்ள
வேண்டும்.

ஒல்கா: எப்போது நீ விடுதலையாகிறாய்?
ஹிகோ: இப்போதுதான்
ஒல்கா: எனவே நீ நேராக இங்கே வந்தாய்?
ஹிகோ: அப்ப நான் எங்கே போயிருக்க வேண்டும் என நீ நினைக்கிறாய்?
ஒல்கா: நீ இன்னும் யாருடனும் கதைக்கவில்லை?
(ஹிகோ அவளை வியப்புடன் பார்த்தவாறு பலமாக சிரிக்கிறான்)
ஹிகோ: இல்லை ஒல்கா இல்லை பயப்படவேண்டாம் நான் யாரோடும் கதைக்கவில்லை.
ஒல்கா: அவர்கள் உன் தலையை மொட்டையடிக்கவில்லை
ஹிகோ: இல்லை
ஒல்கா: ஆனால் அவர்கள் உனது தலையிலிருந்த சுரணை மயிர்களை எடுத்து விட்டிருந்தார்கள்.
(மௌனம்)
ஹிகோ: என்னை மீண்டும் சந்தித்ததில் உனக்கு சந்தோஷம் இல்லையா?
ஒல்கா: அதைப்பற்றி எனக்கு சொல்லத் தெரியாது (ஒரு கார் நெடுஞ்சாலையோரமாக செல்கின்றது. காரின் எஞ்சின் சத்தம், ஹோான். ஹிகோ தன்னை சிலிர்த்துக் கொள்கிறான் கார்களின் ஓசைகள் மங்குகின்றது. ஒல்கா அவனை விறைப்புடன் பார்க்கிறாள்)
அவர்கள் தாமாக உன்னை விடுதலை செய்தது உண்மையானால் நீ பயப்படத் தேவையில்லை.
ஹிகோ: அவ்வாறு இல்லை என எண்ணுகின்றாயா? (தோள்களைச் சிலிர்த்தபடி) லூயீஸ் எப்படி
ஒல்கா: ஓ.கே
ஹிகோ: லாரண்ட்
ஒல்கா: அவன் துரதிஷ்டவசமானவன்
ஹிகோ: நானும் அப்படிதான் நினைத்தேன். ஏன் அப்படி நினைத்தேன் என எனக்குத் தெரியவில்லை– அவன் இறந்து விட்டான் என நான் அவனை

**23ம் பக்கம் பார்க்க..**

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 18

## சின்னத்தம்பி வேலாயுதம்

1977-80 ம் ஆண்டு காலகட்டத்தில் இலங்கை இந்திய பாகிஸ்தானிய உறவுகள் சுமுகமாயிருந்ததற்கான காரணிகளை ஆராய்ந்து பார்ப்பது மிக அவசியம். இலங்கையில் ஜே. ஆரும், இந்தியாவில் ஜனதாவின் மொரார்ஜி தேசாயும், பாகிஸ தானில் பூட்டோ சிறைப்பிடிக்கப் பட்டு இராணுவ ஜெனரல் ஷியா உல் ஹக்கும் பதவிக்கு வந்தனர்.

முன்னைநாள் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் ஒரு அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபன முகவராக (சி.ஐ.ஏ. ஏஜண்ட்) செயற்பட்டாரென சமீபகால ஆய்வுகள் தெரிவிக்கின்றன.(THE PRICE OF POWER KISSINGER IN THE NIXON WHITE HOUSE BY SEYMOUR M. HERSH SUMMIT BOOKS 1983 ஐ பார்க்கவும்) தேசாய் இந்திரா காந்தியின் உதவிப் பிரதமராயிருந்த போது சி.ஐ.ஏ. முகவராகச் செயற்பட்டு இந்திராவின் சோவியத் தொடர்புகள் பற்றிய இரகசியங்களையும் பங்களாதேஷ் படையெடுப்பு பற்றிய இரகசியங்களையும் சி.ஐ.ஏ.க்கு வழங்கினுர் என நூல் தெரிவிக்கிறது.

மேலும் அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் நிர்வாகக் காலத்தில்சி.ஐ.ஏயின் அதி ரகசியப் பிரிவான கமிட்டி 303 க்கு ஊடாக ஆண்டுக்கு 20,000 அமெரிக்க டொலர்களைத் தேசாய் பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிடுகிறது. இந்திரா காந்தி தன்னுடன் ஒத்துழைக்காத தேசாயைப் பதவி நீக்கியதும் பின் அவர் தலைமையில் ஜனதா தள்" உருவாகி 1977 மார்ச்சில் இந்திரா தோற்கடிக்கப்பட்டதும் இங்கு அவதானிக்கப்படல் வேண்டும்.

1977 காலகட்டத்தில் அமெரிக்க ஆதரவாளரான ஜே. ஆர்., ஜியா, தேசாய் ஒரே சமயத்தில் பதவிக்கு வந்ததும் பங்களாதேஷில் இராணுவப் புரட்சியில் அமெரிக்க சார்பு அரசு ஆட்சியிலிருந்ததும் பிராந்தியம் அமைதியாக இருந்ததாகவும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த ஆட்சி மாற்றங்களின் பின்னணியில் மேலாதிக்கம் வல்லரசான அமெரிக்காவினதும் சி.ஐ.ஏ. யினதும் மிக முக்கிய பங்கு இருந்திருக்கவேண்டும். ஏனெனில் இந்த மூன்று அரசுகளும் பதவிக்கு வந்ததும் ஒரே வித செயற்பாடுகளில் இறங்கின. சிறிமாவோவுக்கு எதிராகஜே.ஆர் ஆணைக்குழு நியமித்துக் குடியுரிமையைப் பறித்தார். இந்திராகாந்தி எதிராக அதிகார துஷ்பிரயோக குற்றச் சாட்டு சுமத்தப்பட்டு அலகபாத் நீதிமன்றத்திலுல் தண்டிக்கப்பட்டு இருவாரம் சிறை சென்றூர். பூட்டோவுக்கு எதிராக "கொலைக்கு உடந்தையாக விருந்தது" என்று குற்றச்சாட்டப்பட்டு யூரர்கள் நான்கு-மூன்ருக குற்றவாளியை தீர்மானித்தும் கூட சர்வசேச நீதிச் சம்பிரதாயங்களுக்கு முரணகத் தூக்கிலிடப்பட்டார்.

மேற் கூறப்பட்ட மூன்று தலைவர்களும் தேசிய வாதிகளாகவும் அணிசேரா நாடுகளின், மூன்ரும் உலக நாடுகளின் அபிமானத்துக் குரியவர்களாகவும், மேற்குலக சந்தையாக இருப்பதற்குப் பதிலாக சுய பொருளாதாரத்தில் நம்பிக்கையுடையவர்களாகவும் இருந்தனர். ஆகவே பிராந்தியத்தில் இவர்களுடைய ஆட்சிகளை அகற்ற சி.ஐ.ஏ முனைவது தவிர்க்க முடியாத நியதியே. ஆனுல் 1977 அமெரிக்க ஆதரவு அரசுகள் பதவியேற்ற போதும் இது நெடுங்காலம் நீடிக்கவில்லை அமெரிக்காவின் சி. ஐ.ஏ யின் கணக்குப் பிழைத்தது. அதாவது 1980 ஜனவரியில் இந்திரா மீண்டும் பிரதமாரானுர் ஆனுல் இலங்கை பாகிஸ்தானில் அத்தகைய மாற்றம் சம காலத்தில் ஏற்படாததால் இந்திராகாந்தி மீண்டும் பிராந்தியத்தின் நிலமைகளை மாற்ற முற்பட்டார். பாகிஸ்தானைப் பொறுத்தவரை இராணுவ ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்ததால் மாற்றங்களை ஏற்படுத்துவது இலகுவானதல்ல. பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான வகையில் வளர்ந்திருந்தது.

அதனுல் இலங்கை விவகாரங்களில் இந்திரா தீவிர கவனம் எடுத்தார். இலங்கை விவகாரங்கள் வெளிவிவகார அமைச்சுக்கன்றி இந்திரா நேரடியாகத் தனது கண்காணிப்புக்குக் கீழ் கொண்டு வந்தார். கொள்கை வகுத்தல், முடிவுகளை எடுத்தல் ஆகிய இரண்டும் இந்திராவின் கையிலிருந்தது. இது இருமட்டங்களில் கையாளப் பட்டது. முதலாவது மட்டத்தில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஆர். என்.காவ், கே. சங்கரன் நாயர் (இயக்குனர்- பிரதமர் செயலகம்) கிரிஷ்சந்திர சஷேனு-ரூதலைவர் ஆகியோர் இருந்தனர். இவர்கள் தமிழீழப் போராளிகளுக்கான பயிற்சி, ஆயுதம் வழங்கல் என்பவற்றில் முரண்பாடுகளை கையாளவும், தேவைக்கேற்ப

**எம்.ஜீ..ஆரும் தமிழக மக்களும் திருப்திப்படக் கூடியவாறு இலங்கைத் தமிழர் அமைதியுடனும் உரிமைகளுடனும் வாழக் கூடியதான ஒற்றையாட்சியின் கீழான ஒரு தீர்வு இந்திராவைப் பொறுத்தவரை அவசியமா னதாகவிருந்தது.**

கட்டுப்படுத்தவும் திட்டம் வகுப்பவர்களாகவிருந்தனர்.

இரண்டாவது மட்டத்தில் ஆர்.வெங்கட்ராமன் (பாதுகாப்பு அமைச்சர் பின்பு ஜனாதிபதி) P.V. நரசிம்மராவ் (வெளியுறவு அமைச்சர்– தற்போதய பிரதமர்) எம்.கே ராஸ்கோத்ரா (வெளியுறவுச் செயலாலர்) பீ.சீ. அலெக்சாந்தர் (பிரதமரின் செயலாளர்) ஆகியோராவார். மேற்குறிப்பிட்ட எல்லோரும் இந்திராவின் விசுவாசிகளும் அவரின் நம்பிக்கைக குரியவர்களுமாவர்.

1979ம் ஆண்டு யூலையில் பயங்கரவாத தடைச் சட்டம் பி.டி.ஏ கொணரப்பட்டதும் அதைத் தொடர்ந்து யாழ் நகரில் இன்பம் போன்ரோரின் கொலைகளும், பின் 1981 மாவட்ட சபை தேர்தலின் போது அரசபடைகளின் அடாவடித்தனங்களும் யாழ் நூலக எரிப்பும் பற்றி முன்பே குறிப்பிட்டு விட்டேன். இச் சம்பவங்களின் தொடர்ச்சியாகத் தமிழ்ப் போராளிகள் தமிழக ஆதரவுடன் இராணுவப் பயிற்சிக்கான முஸ்தீபுகளைச் செய்தனர். இதை அறிந்த "ரோ" ஆயுதப் பயிற்சிக்கான விடயங்களைத்தமிழக அரசிடம் விடுவதனுல் வரக் கூடிய விளைவுகளை உணர்ந்து தான் எடுத்துக் கொண்டது.

1977 லிருந்து 1980 ஜனவரியில் இந்திரா பதவிக்கு வரும்வரை ரோ செயலிழந்தது. மொரார்ஜி ஆர்.என்.காவை கட்டாய லீவில் அனுப்பி "ரோ" வை புனருத்தாரணம் செய்த போது தமிழ் போராளிகளுடைய ஆயுதப்பயிற்சி ஒரு முடிவெடுக்கப் பட்ட விடயம் போலவே இந்திரா காந்தியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அப்படி யிருக்கவும் இந்திரா மேற்கூறிய இருமட்டங்களுடனும் கலந்து ரையாடி ஆயுதப் பயிற்சி வழங்குதல் பற்றிய அபிப்பிராயங்களை அறிந்தார்.

பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் இளைஞர்களுக்கு இரகசிய ராணுவ உதவி வழங்குவதை எதிர்த்தார். நரசிம்மராவ், ராஸ்கோத்ரா ஆதரவோ எதிர்ப்போ காட்டவில்லை. முதலாவது மட்டம் எடுத்த முடிவுகள் எம்.ஜீ. ஆருடனும், ஜீ. பார்த்தசாரதியுடனும் (தலைவர்– திட்டமிடல் கொள்கை வகுத்தல்) விவாதிக்கப்பட்டது. பார்த்த சாரதியும் இரகசிய இராணுவ உதவிகளை இளைஞர்களுக்கு வழங்குவதை எதிர்த்தார்.

முதலில் இந்திரா காந்தி எம்.ஜீ. ஆருடன் கலந்துரையாடி பயிற்சி முகாம்களை மூடும்படி கேட்டுக் கொண்டார். ஆனுல் எம்.ஜீ.ஆர் பதில் பின்வருமாறு அமைந்திருந்தது. "தமிழக மக்கள் ஈழத்தமிழர்களுக்கு உதவ விரும்புகிருர்கள். அத்தோடு கருணுநிதி ஏற்கனவே இந்த விடயங்களை தமிழக அரசியல் விவகாரமாக்கியுள்ளார். அதனுல் நான் ஈழப் போராளிகளுக்கு உதவவில்லையானுல் இது கருணுநிதிக்கு அரசியல் ரீதியான பலத்தைக் கொடுக்கும்" இங்கு முக்கிய விடயமென்னவெனில் எம்.ஜீ ஆரைப் புறக்கணிக்க முடியாத இந்திராவின் நிலைதான்.
இந்திரா எம்.ஜி.ஆரின் கோரிக்கையை நிராகரித்துத் தமிழக பயிற்சி முகாம்களை மூடுவதாயின் எம்.ஜீ ஆரைப் பார்க்க நேரிடும். தெற்கில் வேறு பலமான சக்திகளின் ஆதரவும் இல்லை. எம்.ஜீ.ஆரின் அரசைக் கலைத்தாலும் அவர் மீண்டும் பதவிக்கு வருவதுடன் இந்திராவை மதிக்காமல் விடலாம். எம்.ஜீ. ஆரின் விருப்பமின்றிப் பயிற்சி முகாம்களை மூடுவது தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்பட நிறைய வாய்ப்பிருந்தது. ஆகவே பயிற்சி முகாம்களை மூடுவதற்குப் பதிலாக வேறு திட்டங்களை வகுத்து வைத்துக்கொண்டு இளைஞர் களுக்கு உதவி செய்த முடிவெடுக்கப்பட்டது.

எம்.ஜீ.ஆர் இக்கால கட்டங்களில் விடயங்களை ஆய்வு செய்வு முடிவெடுக்கக் கூடிய உடல் நலம் இல்லாதிருந்ததுடன் பண்ருட்டி ராமச்சந்திரன் போன்றவர்களின் முடிவுகளுக்கு "சரி" சொல்லிக் கொண்டிருந்ததும் குறிப்பிடக் கூடியது. ஜீ. பார்த்தசாரதி இளைஞர்களின் இரகசிய இராணுவப் பயிற்சிக்கு எதிராகவிருந்ததுடன் இலங்கை யை சிறுபான்மை மக்களின் பிரச்சனைகளில் ஒரு அரசியல் தீர்வுக்குவரச்செய்வதே சரியானது என இந்திராவுக்கு ஆலோசனை கூறினுர்.

1982மே மாதம்பிரபாகரன் உமா மகேஸ்வரன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒரு முக்கிய சம்பவமாகும் இவர்கள் நாடு கடத்தப்படக் கூடாதென சந்திரகாசன், அதிமுக, தி.மு.க., திக கோரிக்கைவிட்டதும் அதற்கு இந்திரா சம்மதித்து அவர்களை நாடு கடத்தாமல் விட்டதும், தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்கள் இல்லையெனப் பகிரங்கமாக அறிவித்ததும் இலங்கைக் இனப்பிரச்சனையில் இந்திராவின் முடிவுகள் இலங்கை ஆட்சியாளருக்குச்சாதகமானதல்ல என்பது வெளிச்சத்துக்கு வந்தது.

எம்.ஜீ..ஆரும் தமிழக மக்களும்திருப்திப்படக்கூடியவாறு இலங்கைத்தமிழர் அமைதியுடனும் உரிமைகளுடனும் வாழக் கூடியதான ஒற்றையாட்சியின் கீழான ஒரு தீர்வு இந்திராவைப் பொறுத்தவரை அவசியமா னதாகவிருந்தது. அதனுல் தான் 1983 கலவரத்தின் பின்னர் நரசிம்மராவையும் ஜீ.பார்த்த சாரதியையும் இலங்கைக்கு அனுப்பி ஒரு அரசியல் தீர்வுக்கு வரச் செய்வதில் அக்கரை காட்டி "சி" இணைப்பு விவாதிக்கப்பட்டது.

அப்படியாயின், ஏன் இந்திராகாந்தி இலங்கைத் தமிழர் பிரச்சனையிலும் இலங்கை வெளியுறவு அணுகுமுறைகளிம் ஒரு தெளிவான கொள்கையைப் பின்பற்றுவதில் சிக்கல்கள் ஏற்பட்டன. இதற்கு இலங்கை தரப்பு நடவடிக்கைகள் பற்றி விரிவாகப் பார்த்தல் அவசியமானது.
அது அடுத்த வாரம்...

# மரணத்தின் காலடியிலிருந்து இரத்தத்தாலும் கண்ணீராலும் ஒப்பமிடும் விவசாயியின் நிருபம்

**குறிப்பு சி. தொடாவத்தை**
**தமிழாக்கம் செ. லோகநாதன்**
**நன்றி யுக்திய 1994 பெப்ரவரி 14**

தப்போவே மன்னப் பெரும முதியான்சலாகே ஜினதாச ஐம்பது வயது நிரம்பிய விவசாயி. அவர் இத்தடவை சிறுபோக கமச் செய்கைக்காக வங்கிக் கடன் பெற்ருர். ட்ரக்டர் கூலி, விதை நெல், நிலப் பசளைக்காக அக்கடன் செலவு செய்யப்பட்டது. அவர் தனது நெருங்கியவர்களிடமிருந்து மென்மேலும் கைமாற்ருகவும் கடனுகவும் பணம் பெற்று எண்ணெ மருந்துகளை அடித்து நல்லமுறையில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டார்.

ஆயிரம் எதிர்பார்ப்புகளுடன் அவர் தனது வயலை அறுவடை செய்தார் கிடைத்த அறுவடையை விற்றபோது பெற்றுக் கொண்ட வங்கிக் கடனை திருப்பிச் செலுத்துவதற்குக் கூட பணம் கிடைக்கவில்லை. வங்கிக் கடனைக்கூட திருப்பிச் செலுத்தக் கூடிய அளவுக்குத் தானும் தனது வயலிருந்துநெல் அறுவடை செய்ய முடியவில்லையே என்னும் மனவேதனையால் அவர் கமச் செய்கைக்கு அடிக்கப்படும் கிருமி நாசினியைப் பருகி தற்கொலை செய்து கொண்டார்.

தினமும் செய்திப் பத்திரிகைகள் வாசிப்பவர்களுக்கு இவ்வாருன செய்திகள் பழக்கப்பட்டவையாகும். கடனைத்திருப்பி அடைக்க முடியாத விவசாயி தற்கொலை செய்து கொண்டார். விளைச்சல் அழிந்ததால் விவசாயி நஞ்சு குடித்தார். கமச் செய்கைக்காக பெற்ற கடனை அடைக்க முடியவில்லை மூன்று பிள்ளைகளின் தகப்பனுக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. இவ்வாருன செய்தித் தலைப்புக்கள் தினசரி புதினப் பத்திரிகைகளில் வெளி வருகின்றன.

'பஸ் வண்டி புரண்டதால் மூவர் மாண்டனர்' போன்ற செய்திகளுக்கும் மேலே காட்டப் பட்டவாருன செய்திகளுக்கும் இடையேயான வேறுபாட்டை அனேகர் காண்பதில்லை. ஆனுலும் அவை அவ்வாருனதா? விவசாயி தற்கொலை செய்வதற்கு பின்னுல் பாரதூரமான சமுதாய வேதனைகள் மறைந்திருக்கவில்லையா? விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது கடன்களை அடைக்க முடியாததால் மட்டுமல்ல ஒரு தடவை மாத்தளை பிரதேசத்தில் யட்டவத்த என்னும் கிராமத்தைச் சார்ந்த விவசாயி ஒருவர் தக்காளி பயிரிட்ட பின்னர் அத்தக்காளிகளை விற்க முடியாததால் தற்கொலை செய்து கொண்டார். பட்டினியால் அழுத குழந்தைகளின் புலம்பலையும் மனைவியின் குற்றச் சாட்டலையும் தாங்கிக் கொள்ள முடியாத இன்னுமொரு விவசாயி மண் வெட்டியால் தனது மனைவியின் தலையில் அடித்து மனைவியைக் கொலை செய்தார். இன்னுமொரு விவசாயி பயிர்களுக்கு போடுவதற்கான பசளை வாங்குவதற்கு பணம் இல்லாத காரணத்தால் மகளின் கழுத்திலிருந்த தங்க மாலையை கழட்டி ஆயிரம் ருபாய்க்கு விற்ருர். இதனுல் சோகமுற்ற மகள் தற்கொலை செய்து கொண்டாள். இன்னுமொரு குடும்பத்தில் தகப்பனும் மகனும் கூட்டாக புகையிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இறுதியில் அறுவடையை விற்று கடனை அடைத்ததோடு பயிர்ச் செய்கைக்கான ஏனைய செலவுகள் போக எதுவுமே மிஞ்சவில்லை. தமது கைக்கு பணம் ஏதும் கிடைக்காத துயரத்தில் மகன் நஞ்சு அருந்தி உயிரைப் போக்கிக் கொண்டான்.

தற்கொலை செய்வது இந் நாட்டிற்கு புதிய விடயம் அல்ல ஆனுலும் விவசாயத்துடன் தொடர்பான காரணங்களால் இந் நாட்டு மனிதர்கள் தற்கொலை செய்து கொண்டதாக வரலாற்றுக் காரணிகளைத் தேடுவது இலகுவானதல்ல. விவசாயிகள் என்றைக்குமே கஷ்டத்துடனேயே வாழ்ந்தனர் என்பது வரலாற்றில் உண்மைதான் ஆனுலும் வாழ்க்கையே வேண்டாம் என எண்ணும் அளவிற்கு துயரமான நிலமைகள் அவர்களுக்கு எப்போதுமே இருந்ததில்லை.

மிகவும் வேகமாக இந்நிலமை மாறியுள்ளதாக தெரிகிறது. உலகத்துக்கு தாம் வேண்டப்படாதவர்கள் என்பதை இன்று தான் அவர்கள் முதற் தடவையாக அறிகின்றனர். தமக்கு தாமே மிகவும் பாரமானவர்கள் என அவர்கள இன்று அறிந்துள்ளனர். இது அவர்களது வாழ்க்கையுடன்


**தற்கொலை செய்வது இந் நாட்டிற்கு புதிய விடயம் அல்ல ஆனுலும் விவசாயத்துடன் தொடர்பான காரணங்களால் இந் நாட்டு மனிதர்கள் தற்கொலை செய்து கொண்டதாக வரலாற்றுக் காரணிகளைத் தேடுவது இலகுவானதல்ல. விவசாயிகள் என்றைக்குமே கஷ்டத்துடனேயே வாழ்ந்தனர் என்பது வரலாற்றில் உண்மைதான் ஆனுலும் வாழ்க்கையே வேண்டாம் என எண்ணும் அளவிற்கு துயரமான நிலமைகள் அவர்களுக்கு எப்போதுமே இருந்ததில்லை.**

தொடர்பான தனிமைப்பட்ட சம்பவங்கள் அல்ல, முழு உலகத்தினதும்சமூக பொருளாதார கட்டமைப்பு வளர்ச்சி பெற்றது இவ்வாறேயாகும்.

உலகை ஆட்டிப்படைக்கும் கடவுள் ஒருவர் பற்றிய பெரும் நம்பிக்கை முற்காலத்தில் நிலவியது. ஆனால் அந் நம்பிக்கை தவறானது என இன்று பலர் கூறுகின்றனர். அவர்களது நம்பிக்கையின்படி இன்று உலகை ஆட்டிப்படைப்பது உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ஆகும்.

'வளர்ச்சி குன்றிய' நாடுகளின் எதிர்கால தலைவிதி உலக வங்கியின் கடன் வரம் 'வழங்கலிலேயே' தங்கியுள்ளது 'வரம்' பெறுவதாயின் உலக வங்கியால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு உலகம் பூராவும் வியாபித்துள்ள பல்தேசியக் கம்பனிகளின் அவசியங்களுக்கு ஏற்ப தமது நாட்டின் பொருளாதார கொள்கைகள், அரசியல் கட்டமைப்பு சமூகச் சூழல் ஆகியவற்றை மாற்றி அமைக்க வேண்டிய நிலமை கடன் பெறும் நாடுகளுக்கு ஏற்படும். இன்று இலங்கைக்கு நேர்ந்துள்ளதும் இதுவேயாகும்.

கடந்த ஒன்றரை தசாப்த காலத்துள் இந்நாட்டின் சமூக பொருளாதார அரசியல் கட்டமைப்பில் தீர்க்கமான மாற்றங்கள் வேகமாக இடம் பெற்றன. அம்மாற்றத்தின் பின்னர் இந் நாட்டு கிராமிய விவசாயி இந்நாட்டுக்கு அவசியமற்ற மனிதனாக மாறியுள்ளான். இறுதியாக தமக்கு தாமே அவசியமற்றவர்கள் எனவும் இன்று அவர்களுக்குப் படுகின்றது. இந்நாட்டுவிவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது இதனை விளங்கிக் கொள்வதற்கான அடையாள வெளிப்பாடே தவிர வேறு எதுவும் அல்ல, கமத்தொழிலின் சகல துறைகளிலும் பரவியுள்ள நெருக்கடிகளைப் பற்றி பேசாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதை மட்டும் தனிமைப படுத்தப்பட்ட சம்பவங்களாக உரையாடுவது பயனற்ற செயலாகும்.

மேலெழுந்த வாரியாக நோக்கும் போது இந்நெருக்கடி களுக்கான தாக்கத்தை ஏற்படுத்தும் அடிப்படைக் காரணிகள் சிலவற்றைக் காணமுடியும். முதலாவதாக கூறுவதாயின் பல் இனக் கம்பனிகள் ஊடாக இடம் பெற்றுக்கொண்டிருக்கும் சர்வதேச மூலதனத்தின் நடவடிக்கைகள். 'துரித அபிவிருத்தி' இதன் தலைப்புக் கீதமாகும். இதற்காக ஈடுபடுத்தக் கூடிய அளவு மூலதனம் இல்லாத காரணத்தால் நாம் சர்வதேச மூலதனத்திற்கு இடமளிக்க வேண்டும். அவ் மூலதனத்தால் இந்நாட்டு பொருளாதாரத்தின் பொது மட்டம் மேலுயரும். இவ் அபிவிருத்தி கீழ்நோக்கி பாய்வதால் (TRICKLE DOWN) வறுமை தேய்ந்து போகும். சர்வதேச மூலதனத்திற்கு எமது கதவு திறக்கப்பட்டது இவ்வாறேயாகும்.

ஆனால் இன்று பார்க்கும் போது இந்நடவடிக்கைகளால் ஒரு புறம் கிராமியமக்கள் மத்தியில் நீண்டகாலமாக நிலவிய வாழ்க்கை வழிகள் தகர்ந்து போயுள்ளன. இதனால் இவர்களில் அதிகமானோர். பட்டினி, போஷாக்கின்மை வறுமை போன்றவை அதிகரிக்கும் அச்சுறுத்தல்களுக்கு முகங் கொடுத்துள்ளனர். மறுபுறம் இவர்களின் மரபுரிமையாக இருந்த சுற்றுப் புறச்சூழல் இயற்கை ஆகியவற்றின் தயவையும் இவர்கள் இழந்துள்ளனர். மிருகங் களினதும் தாவரங்களினதும் வாழ்வு கூட இன்று அபாயத்தை எதிர் நோக்கியுள்ளது. மனித உரிமைகளையும் மனிதத்தின் கண்ணியத்தையும் இழந்துள்ள விசேடமான மக்கள் கூட்டத்தினராக இக் கிராமிய விவசாயிகள் மாறியுள்ளனர். மறுபுறம் இவ் வறிய கிராமிய மக்கள் இதுவரை காலமும் பெற்றுவந்த சமூக நலச் சேவைகளையும் இழந்துள்ளனர்.

முதலாவதாக அரிசி பங்கீட்டுப் புத்தகத்தை இழந்தனர். இதன் பின்னர் படிப்படியாக சிறிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் ஆலோசனைச 'சேவைகள் உட்பட அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சேவைகளில் வெட்டு ஏற்பட்டது. பசளைக்காக வழங்கப்பட்ட மானியம் நீக்கப்பட்டதால் ரூபா 180 விலையில் விற்கப்பட்ட ஒரு சாக்கு பசளை இன்று ரூபா 540 ஆக விலை உயர்ந்துள்ளது. பயிர்ச் செய்கைக்கான கடனை திரும்ப அடைக்க முடியாத விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இருந்த மத்திய வங்கியின் 75% மாற்று நிதி வசதிகள் நீக்கப்பட்டு சிறிய விவசாயிகளிடமிருந்து அக்கட னையும் வட்டிகளையும் அறவிடுவ தற்காக வழக்குகள் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. விவசாயியின் பிரதான பிரச்சனையான நீர்ப் பிரச்சனை தீர்க்கப்படுவதற்குப் பதிலாக இப் பிரச்சனையை மேலும் குழப்பினர் நீர்ப்பாசன பராமரிப்புகளோ புனர்நிர்மாணமோ சரியான முறையில் இடம் பெறவில்லை. இவை அனைத்தினதும்பெறுபேருக கிராமத்து விவசாயி நாளொரு வண்ணம் வாழ்விலிருந்து மரணத்தை நெருங்கினான். இறுதியில் "கீழ் நோக்கி பாய்தல்" தத்துவத்தை (TRICKLE DOWN) முன்வைத்தவர்களுக்கே அதன் தவறை அங்கீகரிக்க நேரிட்டது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துடன் இணைந்த "விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்' என்னும் அமைப்பால் 'உலகத்தின் கிராமிய வறுமை பற்றிய நிலமை" என்னும் பெயரில் ஆய்வொன்று செய்யப்பட்டது. மொத்த சனத் தொகையில் 50% க்கும் அதிகமானோர் கிராம மக்கள் என்னும் வகைக்குட்பட்ட 114 நாடுகளில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு செய்யப்பட்ட நாடுகளில்

இலங்கையும் ஒன்றாகும். பொதுவாக கொள்ளும்போது இவ் அனைத்து நாடுகளும் இலங்கையைப் போன்றே "கீழ் நோக்கி பாயும்'' தத்துவத்தில் தமது விமோசனத்தை தேடிய நாடுகளாகும்.

1992ம் ஆண்டு ஜூலை மாதம்வெளியிடப்பட்ட அவ் ஆய்வு அறிக்கையில் அம்பலமாகியுள்ள அடிப்படை விடயம் கடந்த இருபது வருடகாலத்துள் அந்நாடுகளில் வறுமை 40 வீதத்தால் அதிகரித்துள்ளது என்பதாகும். இந் நாடுகள் மத்தியில் வேகமாக வறுமை வளர்ந்த நாடு என்னும் சாதனையை இலங்கை நிலை நாட்டியுள்ளது. 1965 ம் ஆண்டில் இலங்கையின் கிராம மக்களில் வறுமை நிலையில் இருந்தது 13 வீதம் ஆகும், ஆனால் இது 1988ல் 46 வீதம்வரை அதிகரித்துள்ளதாக அவ் அறிக்கையில் அம்பலமாகியுள்ளது.

'விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின்' தலைவர் ஐட்றிஸ் ஜஷய்றி (IDRISS JAZAIRY) என்பவரே இவ் ஆய்வு அறிக்கைக்கு முன்னுரை எழுதியுள்ளார்.

கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக மூன்றாம் உலக நாடுகள் வறுமையை இல்லா தொழிப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்ததற்கான பிரதான காரணம் மேலே கூறப்பட்ட கீழ் நோக்கிப் பாயும் தத்துவம் என கடந்த இருவருடகால அனுபவம் மேலும் உறுதிப்படுத்தியுள்ளதாக அவ் அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் என்றைக்கோ ஒரு நாள் வறுமை இல்லாத நிலமை உருவாகும் எனக் கூறமுடியமாயினும் ஆனால் அது அவ்வாறு நிகழும்என நிருபணம்ஆகாததால் அது என்றோ ஒரு நாள் நிகழலாம் என பார்த்துக் கொண்டிருக்க முடியாது எனவும் அவர் அவ் அறிக்கையில் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல, எதிர்வரும் தசாப்தத்தையும் அதற்கு அடுத்து வரும் நூற்றாண்டையும் நாம் நோக்கும்போது வறுமை, பசி இவற்றுடன் தொடர்பான பிரச்சனைகளான சுற்றுப் புறச் சூழல் அழிவு, சமுதாயத்தின் நிச்சயமற்ற தன்மை பற்றிய பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கான புதிய நடவடிக்கைகளை நோக்கி பிரவேசிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் தவிர ஐக்கிய நாடுகளின் குழந்தைகளுக்கான நிதியமும் உணவு விவசாய நிறுவனமும் அவ்வாறான நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன.

இவை நீங்கலாக உலகம் பூராவும் இடம்பெறும் சுற்றுப் புறச் சூழல் பற்றிய உலக சுற்றுப்புறச் சூழல் மாநாட்டிலும் தோன்றிய பிரச்சனைகளின் போதும் அவ்வாறான நடவடிக்கைகளுக்கான அவசியம் வலியுறுத்தப்பட்டது.

உலகமட்டத்தில் இவ்வாறான கருத்தியல் ஒன்று உருவாகும்போது இலங்கையிலும் படிப்படியாக இதற்கு பொருத்தமானதும் சமமானதுமான கருத்தியல் ஒன்று உருவாகியுள்ளது.

நீண்டகாலமாக இந்நாட்டு விவசாயிகள் இயக்கத்துள் தத்துவார்த்த ரீதியாகவும் ஸ்தாபன ரீதியாகவும் செயல்பட்டு வந்த இயங்குனர்கள் சிலரது கருத்தியலாகவே இது ஆரம்பத்தில் தோன்றியது. காணி மற்றும் விவசாய துறையில் புரட்சிகர மாற்றத்தை அவர்கள் விரும்பினர். இந்நாட்டு விவசாயிகள் அவ்வாறான மாற்றம் மூலமாகவே விடுதலை பெறலாம் என அவர்கள் நம்பினர்.

அவ் நம்பிக்கையின் அடிப்படையில் இவர்கள் கட்டி எழுப்பிய ஸ்தாபனம் தான் 'தேசிய காணி விவசாய புனரமைப்பு இயக்கம் இன்று இவ் இயக்கம் இந்நாட்டு விவசாயத்துறையில் செயல்படும் பல்வேறுபட்ட அமைப்புகள் நூற்றுக்கும் அதிகமானவற்றை உள்ளடக்கியதாகும்.

மேலும் விவசாயிகளது சுதந்திரமான அமைப்புகளை உருவாக்குவதற்கும் கிராமிய விவசாயிகளின் விடுதலை தொடர்பாக தேசியரீதியாக கருத்தியலையும் வேலைத் திட்டத்தையும் உருவாக்குவதற்கும் அவசியமான உதவிகளை வழங்குமாறு பொறுப்பு வாய்ந்த அனைவரையும் அவர்கள் வேண்டுகின்றனர். தமது அமைப்பை இந்நாட்டு விவசாயிகளது பரந்த ஐக்கிய முன்னணியாக உருவாக்குவதே இவர்களின் நோக்கமாகும்.

இவ் நீண்டகால நோக்குடன் செயல்படும் இவர்கள் விவசாயிகளின் அன்றாட குறுகிய பிரச்சனைக்காகவும் குரல் எழுப்புகின்றனர்.

தீங்கு விழைவிக்கும் ஆட்சியாளரின் கொள்கைகளாலும் வேலைத் திட்டங்களாலும் அல்லலுறும் இலங்கை மக்களுக்காக மக்கள் மகஜர் எனப்படும் விவசாயிகள் நிருபத்தை நாட்டின் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு சமர்பிக்க இவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

நிலவும் நிலமைகளுக்கு எதிராக இரண்டு இலட்சம் மக்கள் இவ மகஜரில் ஒப்பமிடுவர். நாடுபூராவும் ஏழு மாகாணங்களிலும் கிழக்கு மாகாணத்தில் ஒரு பகுதியிலும் இவ் மகஜரில் ஒப்பமிடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வாழ்வுக்காக அழுது புலம்பும் ஏழை விவசாயிகள் பல்லாயிரக் கணக்கானோர் தூரத்திலுள்ள கஷ்டமான கிராமங்களில் இருந்து சாவுக்கு பதிலாக வாழ்வைக் கோரி இம் மகஜரில் ஒப்பமிடுகின்றனர். இவ் வறிய விவசாயிகள் மரணத்தின் காலடியிலிருந்து தமது இரத்தத்தாலும் கண்ணீராலும் ஒப்பமிட்டு இந்நாட்டு ஆட்சியாளருக்கு சமர்பிக்கும் மகஜருக்கு என்ன பதில் கிடைக்கும் என்பதை நாம் பார்ப்போம்!

# வளர்முக நாடுகளும் குடிமனைப் பிரச்சினைகளும் 3

**வ.ந.கிரிதரன்**

## மண்ணும் மனிதரும்

மண்வீடென்றதும் ஒருவித இளக்காரம் ஏற்பட்டு விடுகிறது உண்மையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்கள் பாவித்து வரும் கட்டடப் பொருட்களில் முக்கியமானதும் முதன்மையானதும் இந்த மண்தான். மனித குல நாகரீக வளர்ச்சியுடன் போட்டி போட்டுக்கொண்டு தப்பிப் பிழைத்து விட்ட சிறப்பு மிக்க கட்டடப்பொருள்தான் இந்த மண். இன்றும் கூட மனிதர்களால் அதன் இயல்பான நிலையிலும், உருமாறிய நிலையில் செங்கற்களாகவும் (Bricks) பாவிக்கப்பட்டு வரும் பாக்கியத்திற்குரியது இந்த மண். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட செங்கட்டிகளை மனிதர்களால் பல்லாயிரக்கணக்கான வருடங்களிற்கு முன்பே பாவிக்கப் பட்டதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. உலகின் பலவேறு பகுதிகளிலும் வாழ்ந்த மக்களின் ஆதிவரலாறு இத்தகைய செங்கட்டிகளின் பாவனையைப் பறை சாற்றுகின்றது.

மண்ணிலிருந்து செங்கற்களை உருவாக்கும் போது இரு வகைகளில் உருவாக்குகின்றார்கள். சூளைகளில் வைத்து சுடப்பட்டு உருவாக்கப்படும் செங்கற்கள் BURNT BRICKS. சூரிய வெப்பத்தில் காயவிடப்பட்டு உருவாக்கப்படும் செங்கற்கள். இவ்விதம் சூளைகளின் உதவியில்லாமல் சூரிய வெப்பத்தில் காய வைக்கப்பட்டு உருவாக்கப்படும செங்கட்டிகளை ஆங்கிலத்தில் ADOBE BLOCKS என்பார்கள் இத்தகைய செங்கற்கள் 25 தொன் சதுர அடி தாங்கும் சக்தி மிக்கவை என்பதை ஆய்வுகள் மூலம் நிலை நாட்டியுள்ளார்கள் அமெரிக்காவில் நிகழத்தப்பட்ட ஆய்வுகள் 33 தொன்/ சதுர அடி தாங்கும் சக்தி மிக்கவை என்பதை நிலைநாட்டியுள்ளன. உண்மையில் இத்தகைய செங்கல் கட்டட அமைப்பு கூரைகள் போன்றவற்றை தாங்கும் சக்தி மிக்கவை என்பதையே ஆய்வுகள் காட்டி நிற்கின்றன. அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகள் பல கூட மண்ணாலான கட்டடங்களை அமைப்பதில் பின் தங்கி நிற்கவில்லை. முதலாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து பொருளாதார மந்தச் சூழ்நிலை நிலவிய காலகட்டத்தில் இந்நாட்டு அரசாங்கங்களால் இத்தகைய மண்ணாலான வீடுகள் (earth homes) பெருமளவில் கட்டப்பட்டன. முன்பே கூறியது போல் இவ்விதம் மண்ணை மனைகளை அமைக்கப் பாவிக்கும் பொழுது அதன் உறுதியை அதிகரிப்பதற்காக, பயன்பாட்டுத் தன்மையை அதிகரிப்பதற்காக சீமெந்து அஸ்பால்ற் போன்ற ஏனைய கட்டடப் பொருட்களைச் சேர்ப்பது வழக்கம். அஸ்பால்ற் என்றதும் தான் ஞாபகம் வருகின்றது. பண்டைய 'பவிலோனியர்கள்' (Babylonians) மண் சுவர்களின் காலநிலைக் கெதிரான தன்மையை அதிகரிப்பதற்காக அஸ்பால்ற்றுடன் மண்ணைக் கலந்து பாவித்திருக்கின்றார்கள். பாவிக்கப்படும் மண்ணின் தன்மைக்கேற்ப, அதனை உறுதிப்படுத்தும் ஊக்கியின் அளவும் மாறுபடும். உதாரணமாக அதிகளவு மணலைக் கொண்டுள்ள மண்ணிற்குக் குறைந்தளவு ஊக்கியே தேவைப்படும். இத்தகைய செங்கற்களை உலோக அல்லது மர அச்சுக்களைக் கொண்டு உருவாக்கலாம். இவ்விதம் உருவாக்கப்படும் செங்கற்கள் சுமார் ஒரு மாதம் வரையில் சூரிய ஒளியில் காய வைக்கப்பட வேண்டும். காய்ந்த கற்களில் வெடிப்புக்கள் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பதை அவதானிக்க வேண்டும். செங்கல் உருவாக்கப்பட்ட மண்ணில் களிமண்ணின் அளவு அதிகமாக இருந்தால் வெடிப்பு ஏற்படலாம். மணல் அதிகமாகயிருந்தால் துண்டுகளாகப் பொடிந்து விடும். எனவே கலவை சரியாகயிருக்க வேண்டும். இது தவிர இன்னுமொரு முறையிலும் மண் பாவிக்கப்படுகிறது. செங்கற்கள் அறிமுகமாவதற்கு முன்பிருந்தே மனித சமுதாயத்திற்கு அறிமுகமான முறைதான். மண்ணைக் குழைத்துப் பூசி உருவாக்கும் முறைதான் அது ஆங்கிலத்தில் Rammed earth என்பார்கள்.

மண்ணைப் பாவித்து மனைகளை அமைக்கும் போது இன்னும் சில விடயங்களையும் கவனிக்க வேண்டும். மேலும் மண்சுவர் முற்றாகக் காய்ந்த பின்னரே அதன்மேல் சுண்ணாம்புப் பூச்சு போன்ற பூச்சுக்களைப் பூசவேண்டும் நன்கு காய்வதற்கு முன்னர் பூசினால் அது பூச்சைப் பழுதாக்குவதோடு மட்டுமல்ல சுவரின் பயன்பாட்டுத் தன்மையையும் ஊறுபடுத்தி விடும். இவ்விதம் உருவாக்கப்படும் மண் வீடுகளை சுண்ணாம்பு அல்லது சீமெந்துச் சாந்து கொண்டு பூசி மெழுகி விட்டால், வெளியிலிருந்து பார்ப்பவர்களிற்கு அது மண் வீடு என்பதே தெரியப் போவதில்லை. இலங்கையின் தென்பகுதிக் கிராமங்களில் முன்பே குறிப்பிட்டது போல மரமும், மண்ணும் சேர்த்து wattle and daub முறையில் அமைக்கப்பட்டு, இவ்விதம் சுண்ணாம்புச்சாந்து lime plaster பூசப்பட்ட வீடுகளைக் கண்டிருக்கின்றேன். மண்வீடு என்பதே தெரியாது. எழுபது எண்பது வருடங்களையும் கடந்து, உறுதியாக நிற்கும் இத்தகைய வீடுகள் பலவற்றை அப் பகுதிகளில் காணலாம்.

புயல் காற்று, பூமி நடுக்கம் போன்றவற்றால் பாதிக்கப்படும் பகுதிகளில் இத்தகைய 'அடொபி'

**21ம் பக்கம் பார்க்க..**

# 'வீடுபேறு, முக்தி, மோக்ஷம் இவைகளைப் பற்றி!'



## ஆனந்த் பிரசாத்

இன்னமும் நான்
நடுத்தெருவில்.....

உண்டான நிலமும்
கிட்டவில்லை
ஒண்டவந்த புலமும்
ஒட்டவில்லை
நான்
அலாஸ்கா
போகப் போகிறேன்.

கடிகாரத்தை
கொஞ்சம் நிறுத்தி விட்டு
இளைப்பாறலாமா
பார்க்கிறேன்!

காலக்குதிரை
பந்தயக் குதிரையானது

மூக்கின் வழியே
புகை கக்கி
வாய் வழியே
நுரை தள்ளி
நாடித்துடிப்பினும்
நான்கு மடங்கான
குழம்போசை யெழுப்பி
வெகு வேகமாக.....

என்னால் சேர்ந்து
ஓட முடியவில்லை

முன்னாளில் எனது
பௌதீக வாகனம்
ஓடிய ஓட்டம்?

இடப்புறமும்
வலப்புறமும்
அலம்பல் வேலிகளும்
கிடுகு வேலிகளும்
குடிசை, கல்வீடுகள்
மதிற்சுவர்களில்
ஒட்டிக்கொண்டிருந்த
சிவாஜி கணேசனும்
எம்ஜீயாரும்
சரோஜாதேவியும்
சந்தியா புத்ரியும்

ஏன், இவர்களை
முத்தமிட்டுக்கொண்டே
மோகத்தீயில் வரண்ட
சாணிக்கட்டிகளையும் கூட
படு வேகமாக
பின்நோக்கித் தள்ளிவிட்டு
எனது வாகனம்
பறந்து கொண்டிருந்தது.

இப்போதோ
நான் நடுத்தெருவில்
தன்னந் தனியனாக.....

கார்களும், கட்டிடங்களும்
பேரோசைகளும்
பெரு வெளிச்சங்களும்
எனக்கு
இடமும் வலமுமாய்
அநியாயமாக என்னை
பின்நோக்கி
உதைத்துத்தள்ளிவிட....

வழிமாறிப் போய்விட்டேன்

முகவரியைக் காட்டி
மொழி தெரியாவூரில்
உதவி கேட்க
எத்தனிப்பதற்குள்
முப்பதுபேர் தாண்டிப்
போய்விட்டிருந்தார்கள்!
முப்பத்தோராமவனை
சிக்கெனப்பிடித்தேன்
மூளையைக் குழப்பிவிட்டு
போய்விட்டான்.

அனுபவங்களை ஆறுதலாக
எழுதலாமென்று
ஆரம்பித்தால்.....
"அவனுக்கும் அவளுக்கும்
அரும்பியது காதல்" என
முதல்வரியைத் துவங்க....
அவனும் அவளும்
அடித்துப் பிய்த்துக் கொண்டு
ஆளுக்கொரு குழந்தையோடு
விவாகமும் ரத்தாயிற்று.

மீன் பிடிக்கலாமென்று
தூண்டிலை எடுத்துக்கொண்டு
கதவைப் பூட்டிக்
கிளம்புமுன் பார்த்தால்....
அதுவே
சமர்த்தாக வந்து
குழம்புக்குள்
உட்கார்ந்திருக்கிறது.

"எள்" என்று வாயெடுக்க
நல்லெண்ணை புட்டியில்!
கடிகாரத்தை நிறுத்திவிட்டு
அலாஸ்கா போகிறேன்

புதுக்கவிதைத் துலைவகள்

ஊரையே தின்று தம்மின்
உதரத்துள் வைத்த மெய்யார்
பாரையே விலைக்கு விற்கும்
பரமசண் டாளப் பாவி
யாரையும் வாங்கி நொடியில்
யாருக்கும் விற்றுத் தீர்க்கும்
பேர்களே நிறைந்த இந்தப்
பெருநிலத் தென்னை வாழ்வு?

# சிவாஸ் ரேடிங் நிறுவனத்தினரின்
# மாபெரும் மலிவு விற்பனை

## மீன் வகைகள் அனைத்தும் மலிவு விலையில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரை | 1.49 | சீலா | 2.49 | சுறு | 1.99 |
| அறுக்குளா | 4,99 | முரல் | 1.99 | கணவாய் | 1.99 |
| விளைமீன் | 4.49 | நீல மீன் | 1.99 | திரளி ,கருந்திரளி | 2.49 |

| | |
|---|---|
| மைசூர் பருப்பு 4 றுத் | 2.99 |
| நல்லெண்ணெய் | 5.99 |
| சோயா இறைச்சி 200 கி | .99 |
| கோழி | 1.99 |
| ஐந்து கிலோ அரிசி மா | 6.99 |
| ஒரு கிலோ அரிசிமா | 1.49 |

| | |
|---|---|
| ஹோமோ பால் | 2.95 |
| 2% பால் | 2.95 |
| குடாஸ் 10 கிலோ கோதுமை மா | 4.99 |
| முட்டை முப்பது | 1.99 |
| வெங்காயம் 10 று | 2.99 |

| | |
|---|---|
| goat leg | 1.99 lbs |
| boneless | 1.99 lbs |
| chicken legs | .69 lbs |
| fresh chicken | 1.99 |
| Frozen Red Shnapper, King fish | 2.99 lbs |
| String Hopper mix | 1.99 |
| Pittu Mix | 1.99 |
| Small dictionary | 3.99 |

| | |
|---|---|
| நிரு கோப்பி பவுடர் | 3.49 |
| சன்யோ றைஸ் குக்கர் | 55.99 |
| 5 கிலோ உழுத்தம்பருப்பு | 6.99 |
| 5 கிலோ மைசூர் பருப்பு | 7.99 |
| தாய்லாந்து புளி 225 கி | .69 |
| 400கி தேங்காய்ப் பால் பவுடர் | 1.99 |
| தேங்காய்ப் பால் ரின் | .89 |
| தாய்லாந்து தேங்காய்ப் பால் பவுடர் | .99 |

| | |
|---|---|
| உள்ளி 1 றுத் | .99 |
| நிரு பிராண்ட் மிளகாய்த்தூள் 2 றுத் | 6.49 |
| பிரகாஷ் பிராண்ட் மிளகாய்த்தூள் 1 கிலோ | 5.99 |
| நிரு பிராண்ட் அரிசிமா 1 கிலோ | 1.69 |
| நிரு பிராண்ட் அரிசிமா ஐந்து கிலோ | 7.99 |
| இருபது கிலோ பஸ்மதி | 27.99 |
| 5 கிலோ பஸ்மதி | 7.99 |
| சீக்கான் பிராண்ட் அரிசிமா 1கிலோ | 1.59 |
| 1 கிலோ அரிசிமா பிரகாஷ் பிராண்ட் | 1.49 |

# Sivas Trading Co
**3852 Finch Ave E(Kennedy/Finch)**

**321 2739**

# எண் தமிழ்




மொழியின் பெயரால், மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் மனிதம் மரணிக்கும் வேளையில் உலகளாவிய ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துகிறது. இலக்கங்களும் அதன் தோற்பாடும் உலக அளவில் ஒரு பொது கணித முறைமை உற்பவிப்பிற்கு அரசு இயலின் தலையீடோ அன்றி குறுக்கீடோ இல்லாமை இருந்தமை காரணமாக இருந்திருக்கலாம்.

0,1,2,3........9 ஆகிய பத்து இலக்கங்களே இன்று முழு கணிதவியல் மற்றும் கணக்கியலை உருவகிக்கின்றன இந்த பத்தின் தோற்றம் என்ன? விசேடத்துவம் என்ன?.. முதல் சிறப்பம்சம், ஒலி வடிவில் அவை இனத்திற்கினம் வேறுபட்டாலும் எழுத்துருவில் அவை ஒன்றே. கருத்தை விபரிக்க மொழி, கணிதத்தை விபரிக்க எண்.

Arabic, Greek, Chinese, Japanese போன்ற பல்வேறு மொழிகளும் தமக்குள் ஒருவகை கணித குறியீடுகளை கொண்டிருந்திருக்கின்றன. இவற்றுள் எது இன்றைய கணித குறியீடுகளாக உருவகித்தது. ஏனைய குறியீடுகளை விட தமிழ் எண் குறியீடுகளே இன்றைய கணித குறியீடுகளுடன் அதிக ஒற்றுமையை கொண்டுள்ளன. இதை அடி (BASE), தான-பெறுமதி (Place–Value) மற்றும் வடிவம் என்பனவற்றின் அடிப்படையில் ஆராயலாம்.

## இளவழகன்

பொதுவாக எந்தவொரு மொழி- எண்ணும் Binary (அடி-2) octa(அடி-8) அல்லது Hex–Dec(அடி-16) ஐ அடியாக கொண்டிருக்கவில்லை ஏறக்குறைய எல்லாமே அடி-10 ஐ அடிப்படையாக கொண்டன (இங்கு பூச்சிய சேர்க்கை எல்லாமே அடி 10 ஐ அடிப்படையாக கொண்டன. (இங்கு பூச்சிய சேர்க்கை பின்வந்தது என்பது குறிப்பிடத தக்கது.) இதற்கான பொதுவான காரணம் கைவிரல்களின் மொத்தம் பத்தாக இருப்பதாக அமையலாம். தமிழ் எண்ணும் பத்தை அடிப்படையாக கொண்டிருந்தது.

இரண்டாவதாக நோக்கக கூடியது தான-பெறுமதி 1 முதல் 9 வரையிலான ஒன்பது இலக்கங்களும் தமக்குள் ஒரு பெறுமானத்தை கொண்டிருக்கையில், 0 பெறுமதி எதுவுமற்று உள்ளது. இதற்கு பெறுமதி இல்லாவிடினும், ஏனைய ஒன்பது இலக்கங்களின் பெறுமதியையும் மாற்றி அமைக்கக் கூடிய வல்லமை இதற்குண்டு. எந்த பெரிய எண்ணையும் சிறிதாக எழுதுவதற்கு இந்து 0 இன் தோற்றப்பாடே காரணம், இதன் தோற்றபபாட்டால் தான-பெறுமதி விளையுளானது. எந்த பெரிய எண்ணையும் குறிப்பிட மொத்தம் பத்து (0.1,2. ....9) வடிவங்களே போதுமானதாகியது.

உதாரணமாக 0 இன் தோற்றத்தின் முன், 100 மற்றும் 1000 போன்ற எண்களை பல்வேறு மொழிக்குறியீடுகளில் பார்க்கலாம். இவை தனிவடிவங்கள் அதாவது பத்தை விட அதிகமான வடிவங்கள் தேவைப்பட்டன. 0 இன் தோற்றத்திலான தான-பெறுமதி தோற்றமே இன்றைய இலக்கங்கள் ஆயின.

பூச்சியத்தின் தோற்றப் பிரதேசம் இந்தியா என்றே கூறப்படுகிறது. சிலரின் அபிப்பிராயப்படி இது சீனுவிலும் தோன்றி இருந்திருக்கலாம். அதிகப்படியான ஆதாரங்களின்படி ஏனைய எண்கள் இந்தியாவில் தோன்றி அராபியர்கள் மூலமாக ஐரோப்பாவை அடைந்துள்ளது. அதுவே இன்றைய இலக்கங்களாகின. பூச்சியத்தின் பாரிய பயன்பாடால் இதையுணர்ந்த அனைவரும் இதனை பயன்படுத்த தொடங்கினர். அதன் பின் ஒவ்வொரு எண்ணும் 1ம் இடம், 10ம் இடம், 100ம் இடம் என தான-பெறுமதியை கொண்டன. உதாரணமாக 108இல் 10ம் இடத்தில் 0 ஐ இடுவதன் மூலம் அதில் உள்ள 1 இன் பெறுமதியை 100 ஆக்கினர். இதன் மூலம் இந்திய மொழியொன்றின் எண் பயன்பாடே இன்றைய எண்களின் அடிப்படையாகிறது.

இறுதியாக எடுத்து நோக்க கூடியது வடிவமைப்பு. இன்றைய 1 அராபிய 1 ஐ ஒத்துள்ளதாயினும் ஏனைய எதுவும் ஒத்துவரவில்லை. இந்த அராபிய 1ம் இந்தியாவில் இருந்து சென்றதாகவே சில ஆய்வாளர் கருதுகின்றனர்.

தமிழை பொறுத்தவரை உ(2) ரு (5) எ(7) என்பன அவை குறிக்கும் எண்களுடன் மிகவும் ஒத்த வடிவமைப்பை கொண்டுள்ளன. எழுத்து உ ஆனது 2க்கும், ருவானது 5க்கும் ஏ ஆனது 7க்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் எழுத்துக்களே மருவி இன்றைய இலக்கங்கள் ஆகியிருக்கலாம். 3 போன்ற ஏனைய சில எழுத்துக்களும் ஒருவகையில் ஒருமைப்பாட்டையே கொண்டுள்ளன.

ம.ப.பா...

இங்கு எழும் பிரச்சனை தமிழ் எழுத்துக்களின் தோற்றப்பாடே. எந்தவொரு எண் ஆய்வும் தமிழையும் அதன் ஆரம்பத்தையும் அடிப்படைப்படுத்தி ஆராயவில்லை எனலாம். திருக்குறளின் தோற்றம் தமிழின் தோற்றத்தை தருகிறது. திருக்குறளின் தோற்றம் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் என்று கூறப்படுகிறது. திருக்குறளும் பத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு இருப்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒருவேளை ஆரம்பத்தில் திருக்குறள் வாய்மொழியில் மட்டும் இருந்திருக்கலாம். அப்படி இருந்திருப்பினும் அதே எழுத்துக்கள் (உ, ரு,எ,) என்பன உச்சரிக்கப்பட்டுள்ளன எனவே அதே எழுத்துக்களே மொழிக்குள்ளும் எண்ணுள்ளும் இருப்பனவாக இருக்கலாம். அவ்வாறெனின் தமிழும் சமஸ்கிருதத்திற்கு காலத்தில் சமாந்தரமான ஒரு மொழியாகிறது.

எது எவ்வாறுயினும் நாம் மேற்குறித்த அனுமானங்களை கொள்ளலாமே தவிர முடிவுகள் எடுக்க முடியாது. போதிய ஆதாரங்களும் இருக்கப்போவது இல்லை.

## வளர்முகநாடுகளும்..

வகைச் (adobe) செங்கற்களைக் கொண்டு வீடுகளை அமைக்கும் போது மிகக் கவனம் எடுக்கப்பட வேண்டும். வீடுகளின் வடிவமைப்பு நெருக்கமாகக் கச்சிதமாக (compact) இருக்க வேண்டும், அத்திவாரம் உருக்கினால் உறுதிப்படுத்தப்பட்ட காங்கிரீட்டினால் (REINFORCED CONCRETE) உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய செங்கற்களை வைத்து சுவர் அமைக்கும் போது இவற்றை இணைத்து வைப்பதற்காகப் பூசப்படும் 'காரை'யுடன் (Mortar) உருக்குக் கம்பிகளை அல்லது உருக்கு வலைகளையும் சேர்த்துச் சுவர்களை அமைத்தால் அவை உறுதியாக இருக்கும். இவ்விதம் அமைப்பதன் மூலம் சுவர் இறுக்கமானதாகவிருக்கும். மேலும் காலநிலை மாற்றங்களால் சுவரில் ஏற்படவிருக்கும் சுருக்கம் (SHRINKAGE) வெடிப்புக்கள் ஆகியவற்றையும் தவிர்த்துக் கொள்ளலாம். கூரையைத் தாங்குதவற்காக சுவரின் மேல் அமைக்கப்படும் உத்தரங்களைக்கூட (BEAMS) இத்தகைய உருக்கினால் உறுதியாக்கப்பட்ட 'காங்கிரீட்'டைப் பாவித்து உருவாக்கலாம்.

களிமண் (50% ற்குக் குறையாமல்) மணல் (30% ற்குக் குறையாமல்) கலந்து உருவாக்கப்படும் இத்தகைய 'அடொபி' வகைச் செங்கற்கள் உருவாக்கப்படும் நிலையில் 30% வரையில் ஈரத்தன்மையைக் (Moisture content) கொண்டிருக்கும். உசிதமான ஈரத்தன்மை ( optimum) 15%இலிருந்து 18% வரையிலாகும். வைக்கோல் காய்ந்த புல் போன்றவைகளை மண்ணுடன் கலந்து இத்தகைய செங்கற்கள் ஆக்கப்பட்ட வரலாறுண்டு. அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதிகளில் காணப்படும் 120 வருடங்களிற்கும் அதிகமான பழமை வாய்ந்த வீடுகளில் இத்தகைய முறையில் உருவாக்கப்பட்ட செங்கற்கள் பாவிக்கப்பட்டுள்ளன. இவ்விதம் வைக்கோலைக் குறிப்பிட்ட அளவுகளாகக் கத்தரித்து (4" இலிருந்து 8" வரையில்) சேர்த்து செங்கற்களை உருவாக்கும் போது அவற்றில் வெடிப்புக்கள் ஏற்படுவதற்கான நிலைமைகள் உருவாவது குறைக்கப்படுகின்றன. இவ்விதம் வைக்கோல் அல்லது காய்ந்த புல்லைச் (DRIED GRASS) சேர்த்து செங்கற்களை உருவாக்கும் போது, அவற்றிலிருக்கும் புற்கள் அழுகிப் போய்விடாதா என நீங்கள் கேட்கலாம். அதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவு. அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் காணப்படும் 120 வருடங்களிற்கும் அதிகமான பழமையான தென்மேற்குப் பகுதியில் காணப்படும் இத்தகைய செங்கற்களில் காணப்படும் காய்ந்த புற்கள் எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது மேலுள்ள கேள்விக்குப் பதிலாக அமைகின்றது.

இவ்விதம் 'அடொபி' வகைச் செங்கற்களைக் கைத்தொழிலாகச் செய்வது தேவையற்ற நேர விரயத்தையும், மனித உழைப்பையும் உருவாக்கும். இதனைத் தவிர்ப்பதற்கு எளிய வகையில் உருவாக்கப்படும் இயந்திரங்களைப் பாவிக்கலாம். இந்தியா உட்பட வளர்முக, அபிவிருத்தியடைந்த நாடுகளெல்லாம் இத்தகைய இயந்திரங்களைப் பாவிக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை கைகளால் இயக்கப்படக் கூடியன. மணித்தியாலத்திற்கு 150 லிருந்து 500 வரையில், செங்கற்களை உருவாக்க வல்லவை, இந்தியா வுட்பட பெரும்பாலான நாடுகளில் பாவிக்கப்படும் இத்தகைய இயந்திரங்களில் குறிப்பிடத் தக்கவை 'எல்சன் புளக் மாஸ்ட்டர்' (ELSON BLOCK MASTER) சின்வராம் (CINVARAM) ஆகியவையே. இவற்றில் 'சின்வராம்' வகை 'எல்சன் புளக் மாஸ்ட்டரின்' நவீன மயப்படுத்தப்பட்ட இன்னுமொரு வடிவமே. தமிழகத்தில் காரைக் குடியில் அமைந்திருக்கும் அழகப்பா செட்டியார் பொறியியற் தொழில் நுட்பக் கல்லூரியும் இத்தகைய வகைச் செங்கற்களை உருவாக்கும் இயந்திர மொன்றை உருவாக்கியுள்ளது (இவற்றின் தாங்கும் சக்தி 17-32kg/cm$^2$)

தொடரும்

### பிழை திருத்தம்

சென்றவாரம் Wattle and daub என்பது Wattle and raub என்றுள்ளது. திருத்தி வாசிக்கவும். அதுபோல் 2வது பந்தியில் கனடா போன்ற நாடுகளில் வீடுகள் கட்டும் போது மரம் பெரிதளவு கிடைப்பதால்....என்பதில் கனடா போன்ற நாடுகளில் என்பது விடுபட்டுள்ளது. சேர்த்து வாசிக்கவும். மேலும் Wattle and daub என்பார்கள் என்பதிலுள்ள என்பார்கள்... என்றைப்பார்கள் என உருமாறி வந்துள்ளது. திருத்தி வாசிக்கவும்.

# "நினைவில் ஒரு நட்சத்திரம்"

**கே.பி**

"போராட்டங்களும், புரட்சியும் கடையிலே போய் வாங்கக் கூடிய சரக்கல்ல. அடிமை விலங்கு உடைக்கப்பட வேண்டுமானுல், புரட்சிகர போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த முன்னெடுப்புக்கள் மக்களின் போராட்டமாகவே அணிதிரட்டி வழி நடத்தப்படவேண்டும்" யாழ் முற்றவெளி மைதானத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் தீண்டாமைக்கு எதிராக திரண்டிருந்த வேளையில் சிறந்த மாக்ஸிசவாதியான தோழர் சண்முகதாசன் முழக்கமிட்டுக் கொண்டிருந்தது இன்னும் பசுமையான நினைவுகளாயுள்ளது.

தோழர் சண் அவர்கள் பட்டதாரியாக பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறிய அதே ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கத்தில் முழுநேர ஊழியனுக்கிக் கொண்டார். சிறந்த நாவன்மை படைத்த இவரது பேச்சு ஆழமானதும், சுவையானதும் சிந்திக்க வைக்க கூடியதுமானது. 1963 ம் ஆண்டு சர்வதேச ரீதியாக எழுந்த தத்துவார்த்த போராட்டத்தில் இலங்கை பொதுவுடமைக் கட்சிக்குள் மாக்ஸீச லெனினிய மாசேதுங் சிந்தனைகளை தூக்கிப் பிடித்து கட்சியின் தோற்றத்திற்கு பங்காற்றினுர். அதன் விளைவாக இலங்கையின் பல பாகங்களிலும் பல புரட்சிகர மாற்றங்கள் எழத் தொடங்கியது. பாமர மக்கள் தொடக்கம் பல்கலைகழகம் வரைக்கும் பல முன்னணி தோழர்கள் உருவாகினுர்கள்.

1956 ம் ஆண்டு பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் தோழர் பொன் கந்தையாவின் வெற்றிக்கு இவரது பங்கு மிகவும் பிரதமானமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். இவரது பேச்சாற்றல் மூலமாக கணிசமான அளவு அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட மக்களின் மத்தியிலும் மாக்ஸிசம் பரவ வழி சிறந்தது. பல மக்கள் கம்யூனிஸ்ட்டுக்களாக தங்களை மாற்றிக் கொண்டது மாத்திரமல்லாமல் சாதீயத்திற்கும் அடக்கு முறைக்கும் குரல் கொடுக்கத் தொடங்கினுர்கள். 1957 ம் ஆண்டு கட்சியின் பொதுச் செயலாளரான பின்னர் மாபெரும் தொழிற்சங்கங்களுக்கும் தலைமை தாங்கி பல போராட்டங்களை முன்னெடுத்து வெற்றி கண்டனவர். தொழில் வழக்குகளை கையாள்வதில் வல்லவரான சண் அவர்கள் இலங்கையின் சிறந்த தொழில் வழக்கறிஞர் என்ற பெயரையும் எடுத்துக் கொண்டவர். இலங்கை செங்கொடி சங்கத்தின் மூலமாக யு.என்.பி. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போன்ற அரசியல் கட்சிகளுக்கு குறிப்பிடப்பட்ட சில வருடங்கள் பெரிய தலையிடியாக இருந்தவரும் இவரே.

யாழ்ப்பாணத்து சாதி அமைப்பிற்கு எதிராக பல போராட்டங்களை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் கீழ் வழி நடத்தியது. இந்த இயக்கத்தின் விழிப்பின் மூலம்தான் யாழ்ப்பாண வரலாற்றிலே என்றுமில்லாத அளவுக்கு அடிமைத்தனங்கள் தகர்தெறியப்பட்டதோடு, பல புதிய போராளிகள் வெளிவரத் தொடங்கினுர்கள். சரித்திரப் பிரசித்த மாவட்டபுரம் ஆலயப்பிரவேசம் அடக்கப்பட்ட மக்களைப் பொறுத்த வரையில் ஒரு வரலாற்று காவியமாகும். இதில் வேடிக்கை என்னவென்ருல் சாதி அமைப்பை ஆதரித்த அடங்காத் தமிழர் திரு உ.சுந்தரலிங்கமும், அதை உடைப்பதற்கு மக்களை அணிதிரட்டி, போராட்ட மூலம் வெற்றி கண்டவர் அவரிடம் கல்வி கற்ற தோழர் சண் அவர்களும். இறுதியில் அடக்குமுறை தகர்த்தப்பட்டது, பின்னர் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் உட்பட பல ஆலயங்கள் திறந்து விடப்பட்டமை குறிப்பிடவேண்டியது. இலங்கை கம்யூனிஸ் கட்சி வடக்கில் வலுப்பெற்ற பின்னர் தான் தென்னிலங்கையிலிருந்து பல சிங்கள-முஸ்லீம் தோழர்கள் வட பகுதிக்கு விஜயம் செய்ததன் விளைவாக, யாழ் சமூக அமைப்புகள் பற்றி சிங்களப் பத்திரிகைகளில் செய்திகள் வரத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் நடந்த பல முக்கிய போராட்டங்களை வழி நடத்தி வெற்றி பெற்ற பெருமை தோழர் சண் அவர்களையே சாரும்.

முன்னுள் J.V.P தலைவர் ரோகண விஜேவீர பீக்கிங் கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் சங்க தலைவராகி பல திரிபுவாத வேலைகளை மேற்கொண்டதன் விளைவாக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். தன்னைத்தானே தலைவராக்கி ஜனதா விமுக்தி பெரமுன என்ற புதிய கட்சியை ஆரம்பித்து திடீர் புரட்சி மூலம் வரலாற்றை படைக்கலாம் என்று கற்பனு உலகத்தில் வலம் வந்த விஜயவீரவை இனங் கண்டு மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியவரும் தோழர் சண் அவர்களே. விஜயவீரா்வின் பிற்போக்குத் தனத்தால் ஏராளமான புரட்சிகர சக்திகள் அழிக்கப்பட்டதோடு நாட்டிலுள்ள ஏராளமான புரட்சிகர சக்திகள் சிறை வைக்கப்பட்டார்கள் 1971 ஏப்ரல் கிளர்ச்சியின்போது தோழர் சண் அவர்கள் 9 மாதம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். கடுமையான சுகயீனத்தின் மத்தியிலும் இரண்டு அரிய நூல்களை எழுதி முடித்தார்.

மாக்ஸிசவாதியின் பார்வையில் இலங்கையின் வரலாறு, இலங்கை இடதுசாரி இயக்கத்தின் சுருக்கமான வரலாறு என்ற நூலையும் தமிழ் மக்களின் விடுதலைக்கான இலட்சியப் பாதை என்ற நூலையும் 1991 ம் ஆண்டு

ஒரு கம்யூனிச போராளியின் அரசியல் நினைவுகள் என்ற புதிய நூலையும் வெளியிட்டார்.

இன்று தமிழ் மக்களால் தலைவர்கள் என்று பூஜிக்கப்படுகின்ற தலைவர்கள் தங்கள் பாராளுமன்ற ஆசனங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக தேர்தல் காலங்களில் புதிய, புதிய வாக்குறுதிகளை கொடுத்து தமிழ் மக்களை அரச பயங்கர வாதத்திற்கும், அழிவுப் பாதைகளுக்கும் அழைத்துச் சென்றார்களே தவிர தமிழ் மக்களின் எதிர்காலங்களை எண்ணியிருந்து ஆகக்குறைந்தது ஒரு வரலாற்று நூலையாவது எழுதியிருக்க முடியும், சந்தர்ப்பவாத அரசியலில் இவர்கள் நின்றபடியால் எதையும் திடமாக நின்று எழுத முடியாமல் போனது மனவருத்தம் மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கு செய்த மாபெரும் வரலாற்றுத் துரோகமுமாகும். மாக்ஸிச லெனினிய மாவோ சேதுங் சிந்தனையில் உறுதியாகவும், திடமாகவும் நின்றபடியால் அவரால் நல்ல நூல்களை எழுத முடிந்தது. இந்த வகையில் மற்றைய தமிழ் தலைவர்களை விட மேம்பட்டு நிற்கின்றார்.

தோழர் சண் அவர்கள் ஒரு இன மக்களுக்கென்று கட்சி நடத்தியது கிடையாது. பிழைகளை சுட்டிக் காட்டுவதிலும் வாதிடுவதிலும் அவர் என்றுமே பின்நின்றது கிடையாது. இலங்கையின் சிங்கள – தமிழ் முஸ்லீம் மக்களை நேசித்து அரவணைத்து வழிகாட்டியவர். யாழ் குடா நாட்டில் சாதி வெறிக்கு எதிராக போராடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர். அந்த நேரத்தில் உணவு, உறைவிடம் போன்றவற்றை கொடுத்து உதவியர்களும் முஸ்லீம் தோழர்களே. சமுதாய மாற்றங்களை முஸ்லீம் மக்களிடையே மாக்ஸிச வழி மூலம் நெறிப்படுத்திய பெருமையும் தோழர் சண்ணுடையது. அது மாத்திரமல்லாது இனபேதமற்ற இலங்கை வாழ் மக்களுக்கு தலைமை தாங்கி வழி நடாத்திய தனிப்பெரும் தமிழ் தலைவரும் சண் அவர்களே.

சண் அவர்கள் தனது கொள்கையை என்றும் விட்டு கொடுத்தது கிடையாது. 1970 ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் தோழர் சண் அவர்களை அழைத்து தொழில் மந்திரி பதவி கொடுக்க சம்மதம் தெரிவித்திருந்தார். ஆனால் தோழர் அவர்களோ இந்த மந்திரிப்பதவி மூலம் நான் தொழிலாள வர்க்கத்திற்கு என்ன செய்ய முடியும்? என மறுத்தது தொழிலாளர் மேல் வைத்திருந்த உறுதியை வெளிப்படுத்துகின்றது.

சண் அவர்கள் புரட்சி ஒன்றை வழி நடத்தி இலங்கை அரசை கைப்பற்றாத போதும் சரியான தத்துவ வழி நடத்தல் மூலம் மக்களை நெறிப்படுத்துவதில் கைதேர்ந்தவராகவும் திகழ்ந்தார். புரட்சி என்பது மக்களுக்குள் திணிக்கப்படுவதோ அடித்து கனிய வைக்கும் பழமோ அல்ல என்று குறிப்பிட்டார்.

1958 ல் ஏற்பட்ட இனக்கலவரத்திற்கு பின்னர் 1963 ம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயக பூமிக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பிரதேச சுயாட்சி வழங்குவதன் மூலமே இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண முடியும் என்ற கொள்கையை முன் வைத்த அவரின் கருத்துக்கள் அப்போதைய தலைவர்களால் எள்ளி நகையாடப்பட்ட போதும் மீண்டும், மீண்டும் சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் இன்றுவரை அத்தகைய தீர்வுக்கு வர எத்தனிப்பது சண்ணின் தொலை நோக்கிற்கும் தீர்கதரிசனத்திற்கும் ஒரு சான்று என்பதை இந்த முதலாவது ஆண்டு நினைவு தினத்தில் நினைவு கூர்வது சாலவும் பொருத்தமானதே.

## கறை படிந்த...

நினைக்க பழக்கப் பட்டு போய்விட்டது. இப்போது பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.
ஒல்கா: ஜேர்மனியர்கள் இங்கு இருந்தவரை எல்லாம் மிகவும் சிரமமாக இருந்தன.
ஹிகோ: அதுவும் உண்மைதான் அவர்கள் இங்கு இருந்தார்கள்.
ஒல்கா: அவர்கள் இங்கு நான்கு மாதஙகள இருந்தாாகள அவாகள ஹங்கேரிக்குச் செல்லும் வழியில் இங்கு ஐந்து படைப்பிரிவுகளை வைத்திருந்தார்கள் பின்பு அவர்கள் நிலையாக இங்கு இருந்தார்கள்.
ஹிகோ: ஆக (சற்று கவனத்துடன்) இப்போது புதிய படையினர் இருக்கின்றார்களா?
ஒல்கா: பலர்
ஹிகோ: இளம் பராயத்தினரா?
ஒல்கா: இளம் பராயத்தினர்தான் இப்போது ஆள்சேர்க்கும் முறை சற்று வித்தியாசமானது. பல வெற்றிடங்கள் நிரம்ப இருக்கின்றன. இப்போது நாங்கள் அவ்வளவு கெடுபிடியாக இல்லை.
ஹிகோ: உண்மைதான் உண்மைதான், நீயும் சற்று முறையினை ஏற்று இருக்கின்றாய் (சற்று அந்தரத்துடன்) ஆனால் கட்சியின் எல்லா அடிப்படைகளும் மாறவில்லை.
ஒல்கா: ஆம்! சாதாரணமாக சொல்லப்போனால் எனையாவும் முன்பு மாதிரியே.
ஹிகோ: வேறு ஓர் வகையில் சொல்வதானால் நீங்கள் ஒருமாதிரி காலம் தள்ளுகிறீர்கள், சிறையில் இருக்கும் போது மற்றவர்கள் காலம் தள்ளுவதை நம்ப முடியாமல் இருக்கும் மேலும் தற்போது உனது தனிப்பட்ட வாழ்க்கையில் யாருக்கும் பங்கு இருக்கின்றதா?
ஒல்கா: சிலர் இருந்தார்கள், தற்போது இல்லை
ஹிகோ: நீ எப்போதாவது என்னை பற்றிக் கதைத்திருக்கிறாயா?
ஒல்கா: (வெளிப்படையான பொய்யுடன்) சிலவேளைகளில்...

தொடரும்

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை


## வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னன்டோ
## சரத் த சில்வா, ரஞ்சித் குமார

**தமிழாக்கம்: செ. லோகநாதன்**


"சகல சமூக மாற்றங்களுக்கும் அரசியல் புரட்சிகளுக்குமான இறுதிக் காரணத்தை தேட வேண்டியது மனிதனின் மனதுள் அல்ல, சதா காலத்துக்குமான உண்மையும் நியாயத்தையும் தெளிவாகக் காணக் கூடியது மனிதனின் புத்தியில் அல்ல, உற்பத்தி, பண்டமாற்று முறைகளில் ஏற்படும் மாற்றங்களிலேயே இவற்றைக் காண முடியும். அவற்றைத் தேடவேண்டியதும் ஒவ்வொரு விசேடமான காலகட்டத்தினதும் தத்துவத்தில் அல்ல பொருளாதாரத்தின் உள்ளேயேயாகும்" என ஏங்கெல்ஸ் தனது 'கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்' என்னும் நூலில் கூறியுள்ளார். அதற்கமைய ஜேவிபி அரசியல் நடவடிக்கைகளுக்கான இறுதிக் காரணத்தை தேடவேண்டியதும் பொருளாதாரத்தினுள்ளேயே தவிர வேறு எதிலும் அல்ல.

1971 ஏப்பிரல் கிளர்ச்சியைப் போன்றே 1987-1989 கிளர்ச்சிகர நிலமைக்குமான காரணங்களை ஆராயும் போது இந்நாட்டு சமூக பொருளாதார அமைப்பு முறையின் பெறு பேறுகளே இவை என்பதை எம்மால் காணமுடியும்.

நவகாலனித்துவ பொருளாதார பிடியினுலே எமது பொருளாதாரம் ஆட்டி வைக்கப்பட்டது. அதன் சூத்திரக் கயிறு சர்வதேச நிதி அதிகாரிகளதும் சர்வதேசக் கம்பனிகளதும் கையிலேயே இருந்தது. இவர்களின் கையாட்களான தரகு முதலாளி வர்க்கம் சர்வதேச மூலதன அதிகாரிகளின் அவசியங்களுக்கு ஏற்ப இந் நாட்டுப்பொருளாதாரத்தை மாற்றி அமைத்ததோடு அதன் மூலம் சம்பாதிக்கப்பட்ட செல்வத்தை அவர்களும்சேர்ந்து பங்குபோட்டுக் கொண்டார்களே தவிர பொருளாதார விருத்திக்கு அவசியமான மூலதனத்தை முதலீடு செய்யவில்லை. சம்பாதித்த செல்வத்தின் ஒரு பகுதி இலாபம், இலாப பங்கு, வட்டி ஆகியவைகளாக வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டதோடு இன்னுமொரு பகுதியில் பெருமளவு தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் உல்லாச வாழ்க்கைக்காக செலவு செய்யப்பட்டது. ஏதாவது முதலீடு செய்யப்பட்டிருந்தால் அதுமிகவும் சொற்ப அளவேயாகும். எமது நாட்டுப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்திய வெளிநாட்டுக் கம்பனிகள் பல தசாப்தகாலமாக இந் நாட்டுக்கு எவ்வித மூலதனத்தையும் கொண்டு வரவில்லை இயந்திரங்கள், கட்டிடம், தொழில் நட்பம் ஆகிய உற்பத்திச்சக்திகளின் வளர்ச்சிக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. விசேடமாக இவற்றை நாம் எமது தேயிலை றப்பர் தொழிற்சாலைகளின் மூலமாக காணலாம். அவை பல தசாப்தங்கள் பழமை வாய்ந்தவையாகும்.

1956ம் ஆண்டுக்குப் பின்னர் தேசிய முதலாளித்துவத்தை விருத்தி செய்யவும்தேசிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு அம்முயற்சியில் ஓரளவு முன்னேற்றத்தை அடைந்த போதிலும் பொருளாதாரம் நவகாலனித்துவ உலக முறையுடன் பிணையப்பட்டு அதன் பிடிக்குள் அகப்பட்டிருந்தால் போதிய அளவு முன்னேற்றத்தை அடைவதற்கான மூலதன வழங்கலைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதன் பெறுபேருக உற்பத்திச் சக்திகள் வளர்ச்சி குன்றிய நிலையில் இருந்தது மட்டுமல்ல அவ் வளர்ச்சி குன்றிய உற்பத்திச் சக்திகள் கூட ஒரு இடத்தில் தேங்கிக் கிடந்ததையே காண முடிந்தது. இதன் காரணமாக மந்தவேக வளர்ச்சியுடன் கூடிய, ஓரிடத்தில் தேங்கிக்கிடந்த பொருளாதாரத்தையே எம்மால் காண முடிந்தது.

1965ம் ஆண்டு யூஎன்பி ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அதுவரையும் மெதுமெதுவாக வளர்ந்த பொருளாதார நெருக்கடி அதன் முன்னர் நிலவிய பொருளாதார நெருக்கடியுடன் ஒப்பிடும்போது வேகமாக வளர்ந்ததையே காணக் கூடியதாக இருந்தது. அரசாங்கம் கடைப்பிடித்த பொருளாதரக் கொள்கைகளால் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியவில்லை, பொருளாதார தேக்க நிலை மென்மேலும் அதிகரித்தது. இதன் பெறுபேருக வேலை இல்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு, பண வீக்கம் மெய்மைச் சம்பளத்தில் வீழ்ச்சி, விவசாயிகளின் வருமானம் குறைதல் சமூக நலச் சேவைகளில் வெட்டு, கடன் பழு என்பன அதிகரித்ததையே காணமுடிந்தது.

வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்தது, புதிதாக உழைப்புப் படையில் சேர்பவர்களை பொருளாதார நடவடிக்கைகளுள் உறிஞ்சிக் கொள்ளும் வேகம் குறையத் தொடங்கியது. 1968 ம் ஆண்டின் உழைப்புப் படை தொடர்பான ஆய்வின்படி வேலை அற்றோர் தொகை 4,76,000 ஆகும், கல்வி அமைச்சின் திட்டமிடல் பகுதியின் கணக்கெடுப்பின் படி 1970 ம் ஆண்டு தொழில் அற்ற சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரம் சித்தி அடைந்தோர் தொகை 5,50,000 ஆகும்.

1965 ம் ஆண்டுவரை பட்டதாரிகளுக்கு தொழில் பிரச்சனை இருக்க வில்லை. ஆனால் 1965ம் ஆண்டு தொடக்கம் கலைத்துறைப் பட்டதாரிகளும் வேலை அற்றோர் வரிசையில் இணைவதோடு பட்டதாரிகளுக்கும் வேலை இல்லாப் பிரச்சனை ஏற்பட்டது. இவ் வேலை இல்லாத் திண்டாட்டம்சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் உடையோர். பட்டதாரிகளுக்கு மட்டுமன்றி உயர்கல்வியின் மூலமாக தொழிலைத்தேடிக் கொள்ளலாம் என்னும் எதிர்பார்ப்புடன் இருந்த மாணவர் மத்தியிலும் விசேடமாக க.பொ.த உயர்தரம் பல்கலைக் கழக மாணவர் மத்தியிலும் பாரதூரமான அதிர்ச்சியையே ஏற்படுத்தியது.

ஒரு புறம் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் போது மறுபுறம் வாழ்க்கைச் சுமை அதிகரித்ததோடு மெய்மைச் சம்பளத்திலும் வருமானத்திலும் வீழ்ச்சி அதிகரித்தது. இவ் இக்கட்டான நிலமை சம்பளம் பெறுபவர்களுக்கு மட்டுமல்ல விவசாயிகள் போன்ற சம்பளம் அல்லாத வருமானம் பெறுகின்றவர்கள் மத்தியிலும்மனவேதனையையும் விரக்தியையும் ஏற்படுத்தியது.

1961-65 காலத்துள் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 7.7 வீதத்தாலேயே அதிகரித்தது. ஆனால் 1965 கால கட்டத்துள் அதன் அதிகரிப்பு 25.7 வீதமாகும். இதற்கு சமனான விகிதசாரத்தில் பொதுவாக சம்பளம் பெறுபவர்களின் மெய்மைச் சம்பளத்தில் வீழ்ச்சியும் ஏற்பட்டது. பயிர்ச் செய்கைகளுக்கான செலவு அதிகரித்ததும் கடன் பழு அதிகரிப்பும், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதவர்களிடமிருந்து உணவுப்பங்கீட்டுப் புத்தகங்களை அரசாங்கம் பறித்தெடுத்தும் விவசாயிகளின் வாழ்க்கை நிலமையில் பாரிய தகர்வை உண்டுபண்ணின.

இவ்வாறாக சம்பள உழைப்பாளிகளதும் விவசாயிகள் உட்பட வருமானம் பெறுபவர்களதும் பொருளாதார நிலமை வீழ்ச்சி அடைந்ததால் அதனுடன் கூடவே இவர்களில் தங்கி வாழ்பவர்களாக மாறியிருநத வேலை அற்ற இளைஞர்களதும் எதிர்காலத்தில் தொழில் தேடுவோர் வரிசையில் இணைய இருந்தவர்களதும் நிலமை மிகவும் மோசமடைந்தது. அதிகரிக்கும் பொருளாதார நெருக்கடியின் சுமையால் கூடுதலாக பதட்டமடைந்ததும் இவர்களேயாகும். தாம் சமுதாயம்என்னும்தேசத்திலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்ட பகுதியினரே என இவர்கள் எண்ணினர். இவர்களுக்கு விரைவான தீர்வு அவசியப்பட்டது.

ஜேவிபி அன்று தோன்றி வளரத் தொடங்கியது இவ்வாறான பின்னணியின் கீழேயேயாகும். எதிர்பார்ப்பு தகர்ந்த நிலையில் இருந்த வாலிப சக்தியின் இதயத் துடிப்பை ஜேவிபி கண்டது. இளம் மனசுகளின் விரைவுக்கு மிக நன்றாக பொருந்தக் கூடிய வேலைத்திட்டத்துடன் கூடவே ஜேவிபி அரசியல் மேடையில் பிரவேசித்தது. மிகவும் ஆர்வமும் தீவிர ஈடுபாடும் கொண்ட இளைஞர்கள் ஜேவிபியை நோக்கி இழுபட்டு வந்தனர். வேலை அற்ற இளைஞர்களாலும் மாணவர்களாலும் ஜேவிபியின் முதுகெலும்பு உருவாகியது அன்றைய ஜேவிபி அரசியல்குழு உறுப்பினர்கள் 12 பேரில் 8 பேரும், மாவட்டச் செயலாளர்கள் 26 பேரில் 20 பேரும், தொழில், மாணவர் பிரச்சாரம் கல்வி, ஆயுதம் ஆகிய பிரிவுகளைச் சார்ந்த முக்கிய தலைவர்கள் 12 பேரில் 8 பேரும் மாணவர்களும் வேலை அற்ற வாலிபர்களுமே ஆவர். மாவட்டக் கமிட்டிகளை எடுத்துக் கொண்டால் சில மாவட்டங்களின் நிலமை பின் வருமாறு.

கண்டி 16 பேரில் 13 பேர்
பதுளை 09பேரில் 08 பேர்
காலி 17 பேரில் 15பேர்
கேகாலை 19பேரில் 8 பேர்
பொலன்நறுவை 15பேரில் 13பேர்
குருணகலை 12பேரில் 12பேர்
திருகோணமலை 11பேரில் 09பேர்
அநுராதபுரம் 12பேரில் 09பேர்

மாணவர்களும் வேலை அற்ற வாலிபர்களும் ஆவர் முழு அங்கத்துவத்தின் நிலமையும் இதற்குச் சமமானதேயாகும். இவ்வாறாக விசேடமாக வேலை அற்றவாலிபர்களாலும்எதிர்காலம் குறித்து நம்பிக்கை இழந்துமிருந்த மாணவர்களாலும் ஜேவிபி யின் முதுகெலும்பும் பிரதான உந்து சக்தியும் உருவாக்கப்பட்டதால் 1971 ஏப்பிரல் மாதம்ஜேவிபியால் பிரசவிக்கப்பட்ட கிளர்ச்சிக்கான அடிப்படைக் காரணம் பொருளாதாரம் என்பதையே விளங்க முடிகிறது.

ஜேவிபியின் பிரபல்யமான ஐந்து அரசியல் வகுப்புகளில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி' என்பதே முதலாவது வகுப்பாகும். இரண்டாவது வகுப்பான 'சுதந்திரம்' என்னும் வகுப்பில் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நாம் சுதந்திரம் அடையவில்லை என்றே விபரிக்கப்பட்டது. மூன்றாவது வகுப்பான இந்திய விரிவாதிக்கம் என்னும் வகுப்பில் இந்திய விரோதமும் இனவாதமும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இந்திய பெரும் முதலாளித்துவம் தனது பொருளாதார நன்மைக்காக இலங்கையை தமது பிடிக்குள் கொண்டுள்ளது எனவும் கூறப்பட்டது. நான்காவதுவகுப்பு 'இடதுசாரி இயக்கம்' என்னும் பெயரைக் கொண்டதோடு ஐந்தாவது வகுப்பு 'இலங்கைப் புரட்சியின் பாதை' என்பதாகும். இவ்வாறாக இவ் ஐந்து வகுப்புகளில் மூன்று வகுப்புகள் கூடுதலாக மக்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்த பொருளாதாரப் பிரச்சனைகள் பற்றியும் அப் பிரச்சனைகளுக்கான காரணங்களாக தாம் கண்ட காரணங்களை விளங்கப்படுத்துவதையுமே இலக்காகக் கொண்டிருந்தன. ஏனைய அனைத்துப் பிரச்சனைகளும் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு இரண்டாம் பட்சமானதாகவே உரையாடப்பட்டன.

(தொடரும்)

# வேலிகள்



கடற்புத்திரன்

அமெரிக்கனிடம் அணுகுண்டு இருக்கப் போய் தானே 'ஏலாக் கட்டத்தில் ஜப்பானில் போட்டான். இவர்களும் முதலில் தடிகளோடு அணுகிப் பார்ப்பார்கள். ஏலாக்கட்டம் வந்தது என்ருல் மண்டாக்களும் (மீன் முள்ளு), திருக்கைவால்களும் வெளிய வந்து விடும். இவற்றுக் கெதிர்ாக பாளை சீவல் கத்தி துளி நேரம் கூட நிற்க மாட்டாது.

சிறிது நேரம் கதைத்துவிட்டு லேட்டாக வந்தான். வீட்டில் அர்ச்சனை தான்.

லீவு நாளான அன்று அம்மாவும் தங்கச்சிமாரும் யாழ்ப்பாணத்திலிருக்கிற ஆச்சி வீட்ட போய் காலைச் சினிமாவுக்கு போறதுக்காகவிருந்தார்கள்.

7.00 க்கு போனவன் 8.30 போல வந்தால் எதிர்பார்க்க கூடியது தான். அவர்களுக்கு ஊர்ச்சோலி பற்றி, அவன்ர நண்பனைப் பற்றி கவலை ஏது? 'தன் பிள்ளை, குடும்பம், சுகம் என்ற குறுகிய வட்டங்களே சரியானவை' என்று சொல்லி வாழ்கிறவர்களாச்சசே!

பின்னேரம் கோவில் வளவுக்கு போனபோது சுரேஷ், கனகன் எல்லோரும் கால் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

எதிர்த்தரப்பிலே சிவத்தான் இருந்தான். அவசரப்பட்ட செயற்பாடு அவனை 'வில்லத் தன்'மையான கதாநாயகனுக்கி விட்டிருக்கிறது. குகன், பரமு போல சமயத்தில் நல்லாய் விளையாடுறவன். இன்றைக்கு .... விளையாட்டு சுமாராக இருந்தது. கனகன் சொன்னது போல குடித்தனுல்தான் அப்படி நடந்து விட்டானே?

விளையாட்டு முடிய. அவனைப் பார்த்து உயிர்ப பில்லாமல் சிரித்து விட்டுப் போனுன் அவன், சுரேஷ், முத்தன் மூவரும் கூட்டாளிகள் என்பது அவனுக்குத் தெரியும்.

காலையிலே, அவன் சில விஷயங்களை கனகன் மூலமாக அறிந்திருந்தான்.

நளினிட மச்சாள் பார்வதியின் 7வது பிறந்த நாள் கொண்டாட்டம் நேற்றிரவு நடந்தது. வழமைபோல பலகாரம் இவைகளோடு வாடகைக்கு வந்த வீடியோ விடிய விடிய ஓடியது. நளினியும் சரோசாவும் 2வது படத்தோடயே போய்விட்டினம்.

வயிரவரும் (நளினியின் அப்பர்) சிவத்தானும் அங்கேயே தங்கி.... கொஞ்சம் மருந்தும் சாப்பிட்டிருந்தார்கள்) காலையிலும் வெறி அவ்வளவாக கலைந்திருக்கவில்லை.

வயிரவனின் வளவின் பனைகளை கணபதி 'சீவல் தத்தகைக்கு எடுத்திருந்தான். இந்த மாசத்திலிருந்து முத்தனையே அனுப்புருர். அவன் 7–8 மணிக்கெல்லாம் சீவிவிட்டுப் போய்விடுவான்.

தூக்கம் கலக்கத்திலேயும் போன வயிரவர்.. களேபரத்தை ஏற்படுத்த முத்தனும் எம்.ஜி. ஆர் கணக்கில் கத்தியை காட்டியிருக்கிருன், சந்தர்ப்பம் சதி செய்துவிட்டது.

வந்த சுரேஷிடம் "அவனுக்கு எப்படியடா இருக்கிறது' என்று கேட்டான்.

"நல்ல காலம் குடல் வெளிய வரல்லை "என்றவன் "5 இழை பிடிச்சது "என்ருன்.

"வார்ட்டிலே 3 நாளைக்காவது கடைசி மறிச்சு விடுவார்கள்" என்று உதவி நேர்ஸ் சொன்னதைச் சொன்ஞன்.

போக்கிலே போய் அமர்ந்தார்கள் எதிர் பக்கத்தில் குகனும் 2–1 நண்பர்களும் இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள் பஸ் ஒன்று விரைந்தது. ஏ 40 கார் 2 விரைந்தன வேலையால் பிந்தின வட்டுக்கோட்டை தொழிலாளர் பட்டாளம் ஒன்று சைக்கிள்களில் வந்தது.

"நீ ஏன் விளையாடக்கூடாது" என்று சுரேஷ் கேட்டான்.

"மற்றவயள் என்னம் சொல்லுவினம்'' எங்கேயோ பார்த்து பதிலளித்தான்.

இருவருக்குமிடையிலிருக்கிற சாதியமே காரணம். சுரேஷுக்கு புரியாமலில்லை.

"நான் கேட்டு வைக்கிறேன் நாளைக்கு விளையாட வா" என்ருன். ஒருவேளை மறுப்பு வந்தால் ஒன்றும் செய்ய முடியாது. இருந்தாலும் நம்பிக்கை. தவிர அவன் அக்கிராமத்தில் படிப்பிக்கிற ரீச்சரின் மகன்.

அடுத்த நாள் நளினியை விசாரிக்க காத்திருந்த அவர்களுக்கு ஏமாற்றமாகவிருந்தது. அவவோட திரியிற கீதாவும் வரவில்லை. "கூ பாடவேளையில் விளையாடாமல் அவர்கள் வகுப்பிலே இருந்தார்கள் "முத்தனிலே பிழையிருக்குமோ?"

என்று பாபு கேட்டான் "நளினி விரும்பியிருந்தால் கூட.. ஏற்கமாட்டார்கள்" என்றான் சுரேஷ்

"சம்பவத்தை தெளிவு படுத்தாமல் மற்றவர்களைப் போல கதைக்கக்கூடாது" என்றான் அவன்

"நியாயம் பிழங்கிறவர்கள் தமது தவறுகளை மறைக்கவும் பல கதைகளை கட்டி விடுகிறார்கள் அதன் குழப்பம் அப்பாவிகளை போர்க்கோலம் பூண வைத்து விடுகின்றன" 'உணர்ச்சி மனிதர்களை' அவ்வாறு பாபு சொன்னான். பாபு ரேடியோ திருத்துறவன். நாள் கணக்கிலே ரேடியோவில் பிழை தடவி, கடைசியில் பிடித்துவிடுறவன். சமயங்களில் அவனிடம் சில விஷயங்களில் நிதானம்பிறளாமல் அக்கு வேறு ஆணிவேறாக பிரித்து காட்டிவிடுற தன்மை இருந்தது.

"முத்தன் பகுதியிலே படிப்பில்லாததுதும்.. பெரிய குறைபாடு" என்றான் சுரேஷ்

"அவர்களை அடிமை குடிமைகளிலிருந்து விடுபட முடியாதவாறு சாதியக் கொள்கைகளை நாம் வைத்திருக்கிறது தவறு. பக்கவிளைவுகள் தான் இந்த மாதிரி சம்பவங்கள்" என்றான் அவன்.

"பொதுவாக எல்லா சாதியிலும் முற்போக்கான இளைஞர்கள் தோன்றி மறைந்திருக்கிறார்கள்" என்றான் சுரேஷ்.

ஒருத்தியின் கழுத்தில் தாலிகட்டிய பிறகு இப்படி பேசியதை மறந்து விடுவானோ? அவனுள் நினைப்பு ஓடியது.

சுரேஷ் தொடர்ந்தான்.

"ஆனால் அவ்விளைஞர்கள் அக்கொள்கைகளை கடைசி வரை கைவிடாது முன்னெடுக்க வேண்டும்"

"உன்ர குடும்பம் முழுதுமே பாதிக்கப்படும். ஆமா உன் தங்கச்சிட சீதனத்துக்கு எங்கே போவாய்?" கேட்டான் பாபு

"ஏன் நீங்கள் எல்லாம் இல்லையா?" நேரிடையாக கேட்டான்.

இருவரும் சிரித்தார்கள்

"ஒரு வேளை சாத்தியப்படக் கூடியதாயிருக்கலாம் உன் பெற்றோர்கள் உந்த விசப்பரீட்சையில் இறங்க மாட்டார்கள் தவிர, என் வீட்டிலே சீதனம் கேட்பார்கள், வேலன்ர பெற்றோரும் சூழ்நிலைக் கைதிகள்" என்றான் தெளிவாக பாபு

"அப்ப என்ன வழி." சுரேஷ் சோர்வாக கேட்டான்.

"உதுக்கு குடும்ப உறவுகளை அறுத்துக்கொண்டு ஓட வேண்டும்" என்றான் அவன் தீர்க்கமாக "பிறகு இந்த ஜென்மத்தில் உங்களுக்கு கல்யாணம் நடக்காது. ஏற்கனவே பெண்ணடிமைத் தனத்திலிரு க்கிறவயள் பெட்டைகள், எவள் கட்ட முன் வருவாள்?" பாபு கேட்டான்.

"எதையும் 70% கூட எதிர்வு கூற முடியாது." என்று இழுத்தான் அவன்.

"உண்மைதான் ஆனாலும் 70% பாஸ் மார்க்ஸ் ஆச்சே. நம்மவர்களுக்கு இவ்வளவும் போதும் என இருந்தது விடுவார்கள் திருப்பம், மாற்றம் இவற்றுக்கெல்லாம் மினக்கெட மாட்டார்கள்" சிரித்தான்

"சாதி சமய வாழ்க்கை முறைக்கு அமைய வாழ்றதை விட வேற வழியில்லை என்கிறாயா?" சுரேஷ் தீவிரமாக கேட்டான்.

"நமது இனப் பிரச்சனை தீர்க்கப்படவேண்டும்! என்று வெளிக்கிட்ட இளைஞர்களைப் பார்?" அவன் சுட்டிக்காட்டினான்.

"என்ன நடந்தது?" சாதாரணமாக கேட்டான். பாபு தொடர்ந்தான்.

அவர்களுடைய 'சுகதுக்கங்கள் பாதிக்கப்பட்டு விட்டன.. என்றதை அறிந்திருந்தும்.. கொஞ்ச காலங்கள் இழுத்தார்ககள். 30-35 வயசு கடந்தது தான் மிச்சம். மக்கள் அவர்களை கவனிக்கவேயில்லை சிலர் குடியிலே வீழந்துவிட்டார்கள். அடுத்தத் தலைமுறை பக்குவப்படவில்லை அது நல்லாவே 'அவர்களை' விமர்சிக்கிறது.

குடிகாரர்கள் பெண 'லோலர்கள், விடுதலைப் போராட்டத்தை விற்றுவிட்டார்கள் (விட்டு விட்டார்கள்' என்று சொல்லத் தெரியவில்லை) பக்குவம் பத்தாது, இன்னும் கொஞ்சபேர் கல்யாணம் கட்டி..." பாபு தொடர சுரேஷ் மறித்தான்.

"என்ன நீ, கல்யாணம் கட்டுறைதை பிழை என்கிறாயா?"

"இல்லையப்பா, உன் நளினியை யாரும் கவர்ந்து கொண்டு ஓட மாட்டார்கள்" என்று அவன் சிரித்தான்.

"நான் என்ன சொல்ல வர்ரேன் என்றால்.. பழைய வாழ்க்கையிலே 'சரணாகதி' அடைந்துவிட்டார்கள் என்பதைத் தான். அவர்களின் தோல்விக்குரிய சமூக நிலமையை புரிந்து கொள்ளாமல் பிரயோக கணிதத்தில் ஒரு நிறுவலைப் போட்டுப் பார்ப்பது போல அரைகுறை மார்க்சிச அறிவுடன் பகிரங்கமாகவே கணக்குப் போட்டார்கள். பிழைச்சு விட்டது. இனி ஆராய நின்றார்களானால் 40-50 வயசிற்கு போய் நிற்க வேண்டிவரும் பயத்திலே...

விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை என்பது கணக்கிலே "நான் சரியாய் தான் இருந்தேன், இவன் ஏமாற்றி விட்டான்" உவன் ஒருத்தனிலே பிழை, எல்லா சந்தர்ப்பங்களையும் குழப்பி இன நெருப்பை இங்காலையும் தூண்டி விட்டிருக்கிறான் "சேச்சே, எல்லாரும் கள்ளர்கள்" இப்படியான பேச்சுகள்.

சிறிய மகள் "அப்பா" என்று வர "என்ன மேளே," என்று கொஞ்சி விட்டு "எனக்கு இந்த பொறுப்புக்கள் போதும் ஆளை விடு' ஓடுகிறார்கள்"

பாபு "வாப்பாட பேச்சிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனா நாங்களும் என்னம் செய்தாக வேண்டும்?" என்றான் அவன். ஒருத்தருக்கும் பதில் தெரிந்திருக்கவில்லை. பெல் அடிக்க வீட்ட வெளிக்கிட்டார்கள்.

தொடரும்

தொடர் நாடகம்

# கறைபடிந்த கைகள்

ஜான் போல் சாத்ரே

தமிழில்:நேசன்

ஒல்கா (பேச்சாளர்): ஜேர்மனியத் துருப்புக்கள் களத்தில் முனையில் இருந்து முற்றாக பின்வாங்கிக் கொண்டு இருக்கின்றன. சோவியத் துருப்புக்கள் ஏற்கனவே கெஷரைனைப் கைப்பற்றிவிட்டன போலும். இலேரியனில் இருந்து இருபத்தைந்து மைல்கள் வரை முன்னேறி விட்டிருந்தன. பல சந்தர்ப்பங்களிலும் இலேரியன் துருப்புக்கள் போரிட மறுத்து ஓடின. ஓடிய பல துருப்புக்கள் ஏற்கனவே நேச அணிகளின் பக்கம் சாரத் தொடங்கி இருக்கின்றன. இலேரியர்களே, எங்களுக்குத் தெரியும் நீங்கள் சோவியத் துருப்புக்களுக்கு எதிராக ஆயுதமேந்த பலவந்தப் படுத்தப்பட்டு இருக்கின்றீர்கள், இலேரீயா மக்களின் ஜனநாயக உணர்வுகளையும் நாம் அறிவோம், மேலும் நாங்கள்..........

(ஒல்கா வானொலியை நிறுத்தினாள். எந்தவித சலனமும் அவளிடம் காணப்படவில்லை. ஒருகண மௌனம். கதவில் யாரோ தட்டும் சத்தம். கதவை நோக்கி மெதுவாக நகர்கின்றாள். மீண்டும் தட்டும் சத்தம்)

ஒல்கா: யாரது?

ஹிகோவின் குரல்: ஹிகோ

ஒல்கா: யார்?

ஹிகோவின் குரல்: ஹிகோ பிராயன்

ஒல்கா: யார்? (ஒல்கா, கதவருகில் மௌனமாகநின்றாள்)

ஹிகோவின் குரல் : என்னுடைய குரலைத்தெரியவில்லையா? கதவைத் திறந்து என்னை உள்ளே விடு.

(ஒல்கா உடனடியாக தனது மேசை அருகே சென்று லாச்சியைத் திறந்து, கனமான பொருளொன்றை, துவாயில் மறைத்தபடி கதவை நோக்கிச் செல்கின்றாள். எந்த வித சூழ்நிலையும் சமாளிக்கக் கூடிய முறையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறாள். கதவருகே, இருபத்தைந்து வயது மதிக்கத் தக்க ஒரு உயரமான உருவம்)

ஹிகோ: நான்தான் (இருவரது முகங்களும் ஒருகணம் ஒருவரை ஒருவர் கூர்ந்து நோக்குகின்றன) உனக்கு வியப்பாக இருக்கின்றதா?

ஒல்கா: நீ நன்றாக மாறிபோய் இருக்கின்றாய்.

ஹிகோ: ஆம் மாறியிருக்கின்றேன், (மௌனம்) உன்னால் என்னை மதிக்க முடிந்ததா? (துவாயில் அவள் மறைத்திருந்த ரிவோல்வரை நோக்கியவாறு கேட்கிறான்) அவ்வாறாயின் அதனை தூரத்தில் வை.

ஒல்கா: (ரிவால்வரை இன்னும் கையில் வைத்தபடி) நான் நினைத்தேன் உனக்கு ஐந்து வருடங்கள் கொடுக்கப்பட்டிருந்தன என்று.

ஹிகோ: உண்மைதான் எனக்கு ஐந்து வருடங்கள் சிறைவாசம்தான் கொடுத்திருந்தார்கள்.

ஒல்கா: கதவை மூடிவிட்டு உள்ளேவா (அவள் ஒரு அடி பின்னால் நகர்கின்றாள், ரிவோல்வர் ஹிகோவை நோக்கியபடி இல்லாவிடினும் அவசியமேற்படின் எச்சந்தர்ப்பத்திலும் அதைப் பிரயோகிக்க ஆயத்தமாக இருந்தாள். ஹிகோ, ரிவோல்வரை நகைப்புடன் விழித்தபடி கதவைத் சாத்துகின்றான்) நீ தப்பி வந்தாயா?

ஹிகோ: தப்பியா? எனக்குப் பைத்தியம் இல்லை. என்னை அவர்கள் வெளியே தள்ளியிருக்கிறார்கள் (மௌனம்) எனது நன்னடத்தைகளுக்காக அவர்கள் என்னை வெளியே விட்டிருக்கிறார்கள்.

ஒல்கா: உனக்கு பசியா?

ஹிகோ: நான் பசித்திருக்கவேண்டும் என நீ விரும்புகின்றாய், என்ன?

ஒல்கா: எதற்காக நான் விரும்ப வேண்டும்?

ஹிகோ: எப்போதும் எதையும் கொடுப்பது சந்தோசத்தை தரக்கூடியது, அது மற்றவர்களை சற்று தொலைவில் வைத்திருக்க உதவும். அத்தோடு ஒருவன் உண்ணும்போது அவன் அபாயம் அற்றவனாகிறான் (மௌனம்) மன்னிக்கவும் எனக்கு பசியோ, தாகமோ இல்லை.

ஒல்கா: நீ சும்மா சொல்லுகின்றாய்

ஹிகோ: நான் எப்படிப்பட்டவன் என்பது உனக்கு ஞாபகம் இல்லையா? நான் அதிகப்படியாக கதைப்பவன் ஓர் ஓட்டைவாய்

ஒல்கா: ஞாபகமிருக்கின்றது.

ஹிகோ: (அவன் சற்று வீட்டைப் அவதானிக்கின்றான்) என்ன வெறுமை! ஆனால் எல்லாம் அப்படியே இருக்கின்றன. எனது டைப் ரைட்டர்?

ஒல்கா: விற்றுவிட்டேன்.

ஹிகோ : ஹும்! (மௌனம் மீண்டும் அறையை நோட்டம் விடுகிறான்) வெறுமை!

ஒல்கா: என்ன வெறுமை

ஹிகோ: இந்த இடம்தான். இந்த தளபாடங்கள் வெறுமையாக வெறுமையில் வைக்கப் பட்டிருக்கின்றன போலிருக்கின்றது. (அவன் இன்னும் தொலைவில் நின்றான்) ஆமாம், சிறைக்கு வெளியே வாழ்பவர்கள் தம்மிடையே வெறுமையுடன்தான் வாழ்கிறார்கள். இந்த வெறுமை இடைவெளி எப்போதுமே விரயமான ஒன்றுதான்! வெளியே

11ம் பக்கம் பார்க்க..



# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 St. Dennis Dr**
**(Don Mills/Eglinton)**
**(416) 421 3429**

**இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், பால் பழங்கள், உடன் மரக்கறி வகைகள், இறைச்சி, மீன், கடலுணவு வகைகள், கனடிய உணவுப் பொருட்கள் அனைத்தும் மலிவு விலையில் ...**

தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின் ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும் விற்பனைக்கும் பெறலாம்

CD, Audio

**மலிவு விலையில்**

# A.R.K MARKET

**இந்த வருடத்திற்கான வருமானவரிப் பத்திரங்களை பூர்த்தி செய்ய தொடர்பு கொள்ளுங்கள். குறைந்த செலவில் விரைவான சேவை**



# சி.ஐ.ஏ உயர் அதிகாரி கைது! குளிர் யுத்தம் தொடர்கிறதா...?

## தி. உமாகாந்தன்

## சுழலும் உலகம்

உலக அரசியல் அரங்கம் தொடர்ந்து அதிர்ச்சியலைகளையும், ஆச்சரிய அலைகளையும் பிரசவித்துக் கொண்டிருக்கிறது. சோவியத் யூனியனின் உடைவின் பின்னர் குளிர் யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்றும், கிழக்கு நாடுகளுக்கும் மேற்குலகுக்கும் இடையேயுள்ள பேதங்கள் நின்று விட்டன எனவும், அமெரிக்காவும் ரஷ்யாவும் மிக நெருக்கமான நட்பு நாடுகளாவிட்டன எனவும் மேற்குலக செய்தித் தொடர்பு ஸ்தாபனங்கள் செய்திகளை தாங்கி வந்தன. இதனை வலியுறுத்தும் வகையில் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ஸ்ரினுக்கு இக்கட்டான நிலமைகள் ஏற்பட்டபோது அமெரிக்கா கை கொடுத்தது. இரு நாடுகளுக்கிடையேயும் உச்சி மகாநாடுகள் அடிக்கடி நடந்தன. உறவுகள் வளர்வது போன்ற பிரமை ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனும் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ்யெல்ஸ்ரினுக்குமிடையே மிக நெருக்கமான தொடர்புகள் இருப்பதாகவும் செய்திகள் உருவகப்படுத்தப்பட்டன.

இந்த நிலையிலேதான் முன்னர் சோவியத் யூனியனுக்கும் இப்போது ரஷ்யாவுக்குமாக உளவு வேலைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏ யின் உயர் அதிகாரி அல்டிரிச் அமெசும், கொலம்பியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட அவரது மனைவியும் கைது செய்யப்பட்டனர். இந்தக் கைது அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனிலிருந்து அமெரிக்காவின் சாதாரண பிரஜவரை அனைவரையுமே அதிர்ச்சியடைச் செய்தது. இந்தச் செயல் மிகப் பாரதூரமான ஒன்று என கிளின்ரன் கூறியுள்ளார்.

அல்டிரிச் அமெஸ் திடீரெனக் கைது செய்யப்படவில்லை அவர்மீது சந்தேகம் கொண்ட புலனாய்வுப் பிரிவு கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக அவரது நடவடிக்கைகளை அவதானித்தது. துப்பறியும் திரைப்படங்களில் வருவதுபோல பொகொதா, கரக்காஸ் போன்ற இடங்களுக்கு அவர் விஜயங்களை மேற்கொண்ட போது புலனாய்வுப் பிரிவில் தொடரப்பட்டார். அவரது சந்திப்புக்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டன. அவரது தொலைபேசித் தொடர்புகள் ஒட்டுக் கேட்கப்பட்டன. அவரது கம்பியூட்டரிலிருந்து குப்பைக்கூடை வரை புலனாய்வுப் பிரிவின் கண்காணிப்புக்குள்ளாகியது. இவற்றின் விளைவே அல்டிரிச் அமேசின் கைது உலகின் நவீன உளவுத் துறையில் விழுந்த பெரிய ஓட்டை என இந்தச் சம்பவம் பத்திரிகைகளால் வர்ணிக்கப் படுகிறது. தமது உளவுத்துறை குறித்து மார்தட்டும் அமெரிக்க அரசின் முகத்தில் இந்தச் சம்பவம் கரி பூசியுள்ளது.

கிட்டத்தட்ட 1985ம் ஆண்டு காலப்பகுதியிலேயே அமேஸ் இருதரப்பு உளவாளியாகவும் (Double Agent) செயற்பட ஆரம்பித்துவிட்டார். சோவியத் யூனியன் உடைந்து ரஷ்யா உருவான போதும் இவரது உளவு வேலைகள் தொடர்ந்தன. சோவியத் உளவு அமைப்பான கே.ஜி.பி. வெளிநாட்டு உளவுச்சேவை எனப் பெயர் மாற்றம் பெற்ற பின்னரும் அமேசின் உளவு வேலைகள் தொடர்ந்தன. அமேஸ் சி.ஐ.ஏயின் உயர் பதவிகளில் இருந்தவர் 1983 வரை இவர் சோவியத் மற்றும் கிழக்கைரோப்பிய நாடுகளுக்கான உளவுப் பிரிவின் தலைவராக இருந்தார். பின்னர் கருங்கடல் பிரதேச நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் போதை வஸ்துக்கடத்தல்கள் பற்றிய விபரம் அறியும் உளவுப் பிரிவின் தலைவராகவும் இருந்தார்.

இவர் இரட்டை உளவாளியாக மாறியபின்னர் சோவியத் உளவு நிறுவனங்கள் தொடர்பாக அமெரிக்க எத்தகைய விடயங்களை அறிந்திருக்கிறது என்பதையும் சி.ஐ.ஏ சோவியத் யூனியனிலிருந்து உளவறிய யார் யாரை ஏஜண்டுகளாக நியமித்திருக்கிறது என்பதையும் சோவியத் யூனியனுக்கு அறிவித்தார். இவரது தகவலகளுக்கு ரஷ்யா பெரும் மதிப்பளித்தது. FBI அதிகாரிகளின் கணிப்பீட்டின்படி இவர் கொடுத்த தகவல்களுக்காக கடந்த சில வருடங்களில் ரஷ்யா 1.5 மில்லியன் டொலர்கள் இவருக்கு கொடுத்திருப்பதாக கருதப்படுகிறது. அது மட்டுமல்ல அமேஸ் கொடுத்த தகவல்களின் பெயரில் சோவியத்தில் அமெரிக்க ஏஜண்டுகளாக இயங்கிவந்த இருவர் கொல்லப்பட்டதாகவும் புலனாய்வுப் பிரிவினர் குற்றம்சுமத்தியுள்ளனர். அது மட்டுமல்ல இன்னும் பல முக்கியமான பாதுகாப்பு ரகசியங்கள் பற்றிய தகவல்களையும் உளவுதுறை பற்றிய தகவல்களையும் ரஷ்ய உளவுப்பிரிவினருக்கு இவர் கொடுத்திருக்கிறர் எனக் கருதப்படுகிறது. 1980களில் அடுக்கடுக்காய் சி.ஐ.ஏ யின் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு சோவியத் புலனாய்வுப் பிரிவுக்கு ஏற்பட்ட வெற்றிகளுக்கும் இவரது தகவல்களே காரணம் எனக் கருதப்படுகிறது. 1991ம் ஆண்டு இவரது நடவடிக்கைகள் குறித்து சந்தேகம் ஏற்பட்டபோது இவர்

பொறுப்புக்கள் குறைவான பதவிக்கு வாஷிங்டனில் அமர்த்தப்பட்டார்.

திரு. அமேஸ்கைதுசெய்யப்பட்டது அமெரிக்க உளவுத்துறைக்கு விழுந்த அடியாக கருதப்படும் அதேவேளையில் இன்னுமொரு முனையில் ரஷ்யா குறித்த அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையும் அடிவாங்கியுள்ளது. அமேஸ் போன்றவர்களை இன்னமும் ரஷ்யா உளவாளிகளாகப் பயன்படுத்துவதால் ரஷ்யா குறித்த தனது கொள்கைகள் குறித்து அரசு மறுபரிசோதனை செய்ய வேண்டும் என்ற அரசியல் அழுத்தங்கள் எழுந்துள்ளன. அதுவும் குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பர சந்தேகங்கள் கிளர்ந்தெழுந்திருக்கும் இந்த வேளையிலே நிகழ்ந்திருக்கும் இந்தச் சம்பவம் பெரும் அரசியல் முக்கியத்துவம் பெறுகிறது.

ரஷ்யாவின் சமீபகால நடவடிக்கைகள் அமெரிக்காவைத் திகைப்படைய வைத்திருக்கின்றன கடந்த இரண்டு வருடங்களாக ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கைகள் பலமிழந்து மந்தமானவையாக இருந்தன. அதுமட்டுமல்ல மேற்குலகுக்கு ஆதரவாகவும் இருந்தன. ஆனால் இப்போதோ ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கைகள் புதிய வேகத்துடன் கிளர்ந்துள்ளன, அதுமட்டுமல்ல இக் கொள்கைகள் முன்னர் போலன்றி தேசியவாதம் நிறைந்ததாகவும் உள்ளன. பொஸ்னியாப் பிரச்சனையில் ரஷ்யா நேரடியாக தலையிட்டது இதற்கான ஒரு உதாரணம். 1993ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கைகள் மாற ஆரம்பித்தன. சர்வதேச அரங்கில் தான் இழந்த கௌரவத்தை மீளப்பெற ரஷ்யா முனைந்தது. 'பொஸ்னியப் பிரச்சனையிலிருந்து இனியாவது மேற்குலம் பாடம் கற்கவேண்டும்' எனக் கூறும் ரஷ்யாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் விற்றலி சுர்க்கின் "மேற்குலகம் கற்கவேண்டிய பாடம் என்னவென்றால் முக்கிய பிரச்சனைகளில் மேற்குலகம் ரஷ்யாவை ஒரு சமபங்காளனாகக் கருதவேண்டும்" என்கிறார்.

இவை மாத்திரம் அமெரிக்காவின் தலையிடிகள் அல்ல, தீவிர வலதுசாரித் தேசியவாதியான வல்டிமீர் ஜிரிநொவ்ஸ்கியின் வளர்ச்சி, பொருளாதாரச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள முயன்ற தலைவர்கள் சமீபத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறியமை, ரஷ்யாவுக்கும் உக்ரேய்னுக்குமிடையில் வலுவடைந்து வரும் முரண்பாடுகள். இவை அனைத்துமே அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்திருக்கின்றன. திரு.அமேஸ் கைது செய்யப்பட்டதற்கு அடுத்த நாள் உதவி ராஜாங்க அமைச்சராக திரு. ஸ்ரோப் தல்பொற்றை நியமிப்பதற்கான வாக்கெடுப்பு அமெரிக்காவின் செனட்டில் நடந்தது. 66 வாக்குகள் இந்நியமனத்துக்கு ஆதரவாக கிடைத்த வேளையில் 31 வாக்குகள் எதிராகக் கிடைத்தமைக்கான காரணம் சமீபகாலங்களில் அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகள் ரஷ்யாவுக்கு சாதகமாக மிதப்படுத்தி வகுத்தவர் அவரே.

ரஷ்யாவுக்கான அமெரிக்க நிதி உதவிகளை தடுக்க முயன்றவர்களுக்கு இப்போது ஒரு வலுவான காரணம் கிடைத்துள்ளது. எங்களை உளவு பார்ப்பவர்களுக்கு நாங்கள் எதற்காக நிதி உதவி செய்ய வேண்டும் என்பது இவர்களது வாதம். ஆனால் ஜனாதிபதி கிளின்ரன் ரஷ்யாவுடனான உறவுகளை சுமுகமாகவே வைத்திருக்க விரும்புகிறார். ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான அந்தனி லோக் ரஷ்யாவுக்கான அமெரிக்க உதவிகள் பற்றி கருத்துக் கூறுகையில் "இவை தர்மத்திற்காக செயல்படுபவை அல்ல, அமெரிக்காவின் அரசியல் நலன்களுக்காகவே செய்யப்படுகின்றன" எனக் கூறியுள்ளார்.

அரசியல் ஆய்வாளர்களின் கருத்தின்படி "அமேசின் துரோகம் குறித்த அமெரிக்கர்களின் கோபம் நியாயமானது, ஆனால் ரஷ்யா குறித்து கோபப்படுவது மிகையானது" என்கிறார்கள் உளவுத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் அமேசின் கைது குறித்து ஆச்சரியப்படவில்லை ஏனெனில் அவர்களது கருத்தின்படி குளிர் யுத்தம் முடிவடைந்த பின்னரும் உளவு நடவடிக்கைகள் பாரிய அளவில் நடந்து கொண்டே இருக்கின்றன என்கிறார்கள். அணு ஆயுதங்கள் தரித்த இரு முன்னாள் எதிர்களுக்கிடையிலான பிரச்சனைகள் ஒரு இரவில் தீர்ந்துவிட முடியும்? என்பது இவர்கள் எழுப்பும் கேள்வி. அதுமட்டுமல்ல உளவு வேலைகளில் ரஷ்யா மாத்திரம் தனியே ஈடுபடவில்லை. அமெரிக்காவும் ஈடுபடுகிறது. ஆனால் அமேசின் பிரச்சனையின் மூலம் ரஷ்யாவிலும் அமெரிக்காவிலுமியங்கி வரும் அமெரிக்க இரட்டை ஏஜண்டுகள் குறித்த விபரங்கள் ரஷ்ய உளவுப் பிரிவுக்கு கிடைத்திருக்கும் எனும் அச்சம் அமெரிக்காவில் எழுந்துள்ளது.

அமெரிக்காவின் உளவுப் பிரிவை அமேசின் பிரச்சனை கவலையடையச் செய்திருக்கிறது. பல கேள்விகளுக்கு விடை அளிக்க வேண்டியுள்ளது. அமேசின் நடவடிக்கைகளால் அமெரிக்க உளவுத்துறைக்கு ஏற்பட்டிருக்கும் இழப்புக்கள் என்ன? என்ன காரணத்துக்காக சி.ஐ.ஏ முன்னரேயே அமேசை சந்தேகிக்கவில்லை? அமெரிக்காவின் வரவு செலவுத்திட்டத்தில் 30 பில்லியன் டொலர்கள் அமெரிக்க உளவுத் துறைக்கு ஒதுக்கப்படுகிறது. இந்நிலையில் இந்தச் சம்பவம் உள்நாட்டு அரசியல் வாதிகளிடத்திலும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்களிடத்திலும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ரஷ்யாவோ "இது ஆச்சர்யமான விடயமில்லை, உளவுத்துறையில் சகஜனமானதே" என சாதாரணமாகக் கூறி பிரச்சனையை முடித்துக் கொண்டு விட்டது.

# வியாதிக்கு மருந்து

## நிலா குகதாசன்

மகரந்தனின் "கனடாவில் தமிழ்" கட்டுரையின் பின்தான் இங்குள்ள வாசகர்கள் பலருக்கு 'சுபமங்களா' என்ற சஞ்சிகை தெரிய வந்ததென்ருல் அது மிகையில்லை என்னுமளவிற்கு சூடு பிடித்த செய்தி இது. இதுபற்றிய எனது கடிதத்திற்கு சென்ற தாயகம் இதழில் அருண் எழுதிய பதிலிற்குப் பதில் இது.... நடந்து முடிந்த சம்பவங்களைக் கிளறி மேலும் இதனல் சீழ் வடிவதை நிறுத்தவேண்டியது நியாயமானது என்பதைவிட மாற்றுக்கருத்து எனக்கில்லை எனினும் அருணின் கேள்விகளுக்கு பதில் தர முயற்சிக்கிறேன்.

★ பொதுவாக எழுதுவோரின் பெயரை மனப்பாடம் பண்ணுதை அல்லது ஆராயாத அருண் எப்படி பாமதி ஒரே ஒருமுறை எழுதிய கவிதையை ஞாபகம் வைத்திருந்தார்? இதே நிலேதான் மகரந்தன் பொதிகையில் எழுதியதற்கும் அதேவேளை மகரந்தன் இதுவரை எதையுமே எழுதவில்லை என்பது தவருனது என்று நான் ஒப்புக்கொள்கிறேன். (ஆனுலும் எங்காவது எப்போதாவது எழுதும் எழுத்தாளர்களை பெயர் சொல்லக்கூடிய எழுத்தாளர்கள் வரிசையில் மகரந்தன் சேர்ந்ததை நான் ஒப்புக்கொள்ளவில்லை)

★ என்வரையில் ஒருவரை நோகடிப்பதோ அன்றி, காழ்ப்போடு விமர்சிப்பதோ பிடிக்காதது ஆனுல் ஒரு பிழையைப் பிழை என்று ஒப்புக்கொள்ள முன்வராத அல்லது மறுக்கும் ஒருவரை வெளிக்கொணரப் பாவித்த சொற்தொடர்களே இந்த விபசாரி, வியாதி போன்றவை, இதைவிட நல்ல தமிழ் எனக்கும் தெரியும். இந்த விடயத்தில் மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் தாயகம் மூலம் எனது தொலேபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.. ஆளைத் தெரிந்தாலும் அவர் ஒப்புக்கொள்ளாத போது இதைத்தான் செய்ய முடியும்.

★ ஒரு பிழை நடந்தால் அதை ஒருவர் சொன்னல் போதும் என்ற அருணின் நிலைப்பாடு பிழையானது.. அப்படியென்ருல் எந்த ஒரு விடயத்துக்கும் (புலிகள் முஸ்லீம்களை வெளியேற்றியதற்கு எதிரான கருத்தரங்கில்) ஒருவரே ஆட்சேபம் தெரிவித்தால் போதுமா? இது வெறும் உதாரணம். எந்தவொரு செயலுக்கும் இது பொருந்தும்.

கீதவாணி வானெலியை அருண் கேட்கவில்லை போலும். யாரோ சொன்னதை வைத்து "இரவல் எழுத்து" எழுதியுள்ளார். ஏனெனில் "கீதவாணி" வானெலியில் எனது கட்டுரையோடு இன்னும் சில விடயங்களும்சேர்க்கப்பட்டதுடன் "நெஞ்சில் உரமின்றி..". என்ற பாரதி பாடலும் ஒலிபரப்பப் பட்டதாக அதன் தயாரிப்பாளர் என்னிடம் சொன்னர். அதோடு இலக்கிய விபசாரி போன்ற பதங்கள் சேர்க்கப்படவில்லையாம். தாயகத்தில் எனது கடிதம் வந்த அன்றிரவு கீதவாணி தயாரிப்பாளர் என்னிடம் தொலேபேசியில் அதை தனது வானெலியில் ஒலிபரப்ப அனுமதி கேட்டார். (ஏனெனில் விடுபட்ட வானெலியில் "கீதவாணியும்" ஒன்று) நான் சம்மதம் சொன்னதுடன் அதன் மூலப் பிரதி தாயகம் என்று குறிப்பிடுமாறும் கூறினேன். இதுபோன்று பலதடவைகள் எனது கவிதை, உரைச்சித்திரம் என்பன "கீதவாணி" ராகப்பிரவாகம் "சங்கராபரணம்" போன்ற வானெலிகளில் மறுபிரசுரமாக அல்லது மறு ஒலிபரப்பாகியுள்ளன.

எனது கடிதம் சுபமங்களாவிற்கு எழுதியது என் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேறு பத்திரிகைகளில் வந்ததை மூலம் சொல்லாமல் வெளியிடும் பத்திரிகைகளுக்கு இல்லாத பத்திரிகாதர்மத்தை விட எனது பத்திரிகாதர்மம் உயர்வானதென்பது என் கருத்து. அதோடு பிரச்சனைக்கான களம் கனடா. எனவே இங்கும் அது வெளிவருவதே என்வரையில் நியாயமானது.

புதிதாக ஒருவர் எழுதுவது தவறல்ல... ஆனுல் அது பற்றிய விமர்சனம் வந்தால் தன்னை இனம் காட்டுவதுதான் எழுத்தாளனுக்கான பண்பு. இங்கே மகரந்தன் புனைபெயரில் எழுதாமல் தன் சொந்தப்பெயரில் எழுதியிருந்தால் நிச்சயம் நான் அவரோடு நேரில் தான் பேசியிருப்பேன். பத்திரிகை மூலமாக அல்ல.

சுபமங்களா வசிட்டர் என்று நான் சொன்னதாக ஏன் எடுக்கவேண்டும்? அதை எழுதிய மகரந்தன் அப்படி நினைத்தாகவும் ஒரு கருத்து இதற்குண்டு என்பது விளங்கவில்லையா? மகரந்தனின் கடிதத்தால் இலக்கியம் அழிந்து விடாது என்று சொல்லும் அருணுக்கு கடந்த காலங்களில் ஈழத்தில் எத்தனை தரமானவர்கள் இதுபோன்ற தரவுகளால் மறைக்கப்பட்டனர் என்பது அவற்றைப் புரட்டிப்பார்த்தால் உண்மை தெரியவரும்.

பொதுவாகவே தென்னிந்திய இலக்கியங்கள், சினிமா என்ருல் அது தமிழ்நாட்டையே குறிக்கும். அருணைப் போன்ற எத்தனைபேருக்கு மலையாள இலக்கியத்தில் பரிச்சயமுண்டு? அருணுக்கு மலையாளம் தெரிந்தால் அங்குள்ள இலக்கியவாதிகளின் படைப்புக்களை ஒரு பட்டியல் போட்டு அனுப்பமுடியுமா?... ஏனெனில் நான் தமிழன்.

தென்னிந்திய சினிமா என்று என்னுலும் ஏனைய தமிழராலும் பொதுவாகக் குறிப்பிடப்படுவது தமிழ்நாடு பற்றியே. இங்கு அல்லது ஈழத்துக்கு அப்படிக் குப்பையாக மலேயாள இலக்கியங்கள் அல்லது சினிமாக்களின் இறக்குமதி உண்டா? மலேயாள சினிமாபற்றி எனக்கும் ஓரளவு தெரியும்.

இளையநிலாவில் சினிமாவின் ஆதிக்கம் பற்றி.. ஜனரஞ்சகமின்றி தனியே இலக்கியம் வளர்த்தவர்களையோ அல்லது கலைப்படைப்புக்களை சினிமாவில் கொண்டுவர முயன்றவர்களையோ தொடர்ச்சியாக யாரும் சந்தித்ததில்லை சினிமா மோகத்திலுள்ளவர்களை மாற்றுவது எளிதல்ல, மாத்திரையிலே சீனி தடவிக் கொடுப்பதுதான் மாத்திரையை இலகுவாக உட்கொள்ள ஒரு வழி. சினிமா இல்லாமல் இளைய நிலா வெளிவந்தால் அடுத்த இதழ் வராமலேயே நின்றுவிடலாம் நாம் சொல்ல வருவதை மெதுமெதுவாகப் புகுத்துவதே சிறந்தவழி என்பது என் கருத்து.. அதற்காக தமிழ் சினிமாக்களை "ஆகா ...ஓகோ.. என்று புகழ்வது என் பாதையல்ல.. ஏன் இளையநிலாவில் அ.கந்தசாமியின் பாலச்சந்தர் பற்றிய பார்வையைப் பார்க்கவில்லையா? இந்திய சினிமா மற்றும் சஞ்சிகைகளால்தான் ஈழத்துச் சினிமா (தமிழ்) சஞ்சிகைகள் வளரவில்லை என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கும் அருண் போன்றவர்களால்தான் இன்னும் இங்குள்ள கடைகளில் எம்மவர்களின் இலக்கிய சஞ்சிகைகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கின்றன.

நான் எக்காரணத்தால் விபச்சாரி, வியாதி போன்ற சொற்தொடர்களை பிரயோகித்தேனே அது சரியான பலனைத்தந்துவிட்டதில் எனக்குச் சந்தோஷமே!

### கியூரியஸ்...

பெண்ணில் விருப்பம் என்றால்.. அவளைக் கண்டதும் தன் பெயரைச் சொல்லிக் கத்தும்படி கூட்டாளிகளிடம் சொல்லி விட.. அவர்களும் பணியைச் செவ்வனே செய்வார்கள்.

யாழ்ப்பாணத்தில் காதல் செய்வது ஒரு நல்ல அனுபவம் தான். நான் எப்போதுமே நாகேஷ் மாதிரி.. . கதாநாயகனின் நண்பன். எனக்கு ஒரு சச்சு கூடக் கிடைக்க மாட்டேன் என்றாள் அந்த நேரத்தில்.. நண்பன் ஒருவன் தன் காதலியை விட்டு வெளிநாடு சென்று கடிதம் போடவில்லை. அந்தப் பெண் என்னைத் தேடி வந்துவிட்டாள். ஏதோ நான் தான் இவர்களுடைய pre nupital ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்ட மாதிரி... நானும் அழுகின்ற ஜெருசலேம் நகரத்துப் பெண்களுக்கு யேசுநாதர் ஆறுதல் சொன்ன மாதிரி சொல்லி வைத்தேன். நீண்ட நாட்களாக ஆளைக் காணவில்லை. பிறகு ஒரு நாள் தற்செயலாய் கண்ட போது எப்படி? என்று கேட்டு வைத்தேன். அவர் என்னைக் கூப்பிடுறன் எண்டிருக்கிறார் என்றாள் லெவலாக.. காலம்! கஷ்டம் என்றால் மட்டும் நான் ஆறுதலுக்கு... இப்போது இருவரும் திருமணம் செய்து பிள்ளை குட்டிகளுடன் இருக்கிறார்கள். வெவ்வேறு ஆட்களை!


# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**Car Certification 29.99**

**755 8550**
**CALL**
**MIKE or RAJAN**

Exhaust, starter, Shocks, Altenater, Clutch
Radio, Transmission, Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic and Electric
திருத்துவதில் பல வருடம் அனுபவம் உள்ளவர்கள்

We use Quaker State Oil



கனடாவில் பலசரக்குக் கடைகளின் விளம்பரங்கள், கனடாப் பத்திரிகைகளில் வரும் வாசகர் கடிதங்கள், ஊரில் காதல் கடிதங்கள் எல்லாவற்றுக்கும் ஒரு வகையில் தொடர்பு இருக்கிறது. இதென்னப்பா? அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன தொடர்பு? மொட்டந்தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சு? என்கிறீர்களா? மேற்கூறிய மூன்று விடயங்களினதும் ஆரம்பம், உள்ளடக்கம், முடிவு எப்போதுமே ஒரே மாதிரித் தான் இருக்கும்.

# கல்லாநிதிக்கு காதலிக்க நேரமில்லை.. கல்லாநிதியை காதலிப்பார் யாருமில்லை..

**அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி**

பத்திரிகையாளர்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் இடையில் ஒரு Love- hate relationship இருக்கும். மூலைக்கு மூலை கடைகளைத் திறந்து வைத்து விட்டு இலையான் கலைத்துக் கொண்டும், வைக்க இடமில்லாதபடி பேப்பர்களைக் கொண்டு வந்து குவிக்கின்ற பேப்பர் காரர்களைத் திட்டிக் கொண்டும் இருக்கிற தொழிலதிபர்களை நம்பித் தான் இந்தப் பத்திரிகையுலகமே இருக்கிறது. "இத்தனை கடைகள் இருந்தால் இதில் ஒவ்வொன்றிலும் ஐம்பது பேப்பர் விற்கும்" என்பதில் இருந்து "இதில இருபது பேர் விளம்பரம் தந்தாங்கள் எண்டால் அச்சடிக்கிற காசை எடுத்திடலாம்" என்பது வரை பத்திரிகை வெளியீட்டாளரின் சிந்தனை கணக்குமயமாகவே இருக்கும். ஊரில் விழாமலர் அடிக்கின்றவர்கள் எல்லாம் மில்க்வைற்றிட்ட விளம்பரம் வாங்கலாம் என்றபடி அலுவலைத் தொடங்குகிற மாதிரி... அது தான் பிள்ளையார் சுழி... இங்கேயும் வியாபார நிறுவனங்களை நம்பித்தான் பத்திரிகைகள் இருக்கும். ஆளுக்காள் விளம்பர விலையைக் குறைத்து, தங்கள் பத்திரிகையில் தான் அதிக விளம்பரங்கள் வருகின்றன என்று காட்ட இலவசமாகக் கூட விளம்பரம் வெளியிடப்படுவதும் உண்டு. மற்ற பத்திரிகைகளில் வந்த விளம்பரங்களின் தொகையைக் கூட்டிப் பார்த்து வாயூறி விளம்பரம் போட்டு காசு வாங்க இழுபட்டு அலையும் போது ..... ஒரு வளர்ப்பு பிராணி பற்றிய ஆபாசமானதும் வக்கிரமானதுமான ஒரு மரபுச் சொற்றொடர் தான் நினைவுக்கு வரும். (இன்னொரு பச்சை இலக்கிய 'விமர்சனப்' போருக்கு நான் தயாரில்லைப்பா.... அதுசரி... யுத்த முனை விஜயம் என்னாச்சு? சஞ்சயன் சௌக்யமா?)

இந்த பத்திரிகைகளில வருகின்ற இந்த பலசரக்குக் கடை விளம்பரங்களைப் பார்த்தால் அவற்றின் உள்ளடக்கம் ஒரே மாதிரித் தான் இருக்கும். 'இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட ...... போன்றவற்றை பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம் தான்' என்று இருக்கும். ஒரே சந்தியிலேயே மூன்று நான்கு நாட வேண்டிய 'ஒரே இடங்கள்' இருக்கும்.

★ ★ ★

இதைப் போல இதே பத்திரிகைகளில் வருகின்ற வாசகர் கடிதங்களின் முடிவும் இதைப் போல ஒரே மாதிரியாகத் தான் இருக்கும். தமிழ் படத்தில் பொலிஸ்காரர் இறுதியாக வந்து விழா இனிதே நிறைவேறுதல் போல... பத்திரிகைக்கு பத்திரிகை 'அடிகடி' மோசமாய் இருக்கும்போது 'போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும், தொடராட்டும் உங்கள் பொன்னான பணி' என்று இருக்கும். ஏதோ அண்ணாத்துரை என்ற நினைப்பில் 'த, ப'வில் அடுக்குமொழி?

★ ★ ★

இதைப் போலத் தான் காதல் கடிதங்களின் தொடக்கம் ஒரே மாதிரியாக இருக்கும். நீங்கள் வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் காதல் வயப்பட்டிருப்பீர்கள். பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு வேலியால் றொக்கட் விட்டது முதல், பக்கத்து ஊர் பள்ளிக்கூட பெண்ணுக்காக சைக்கிளில் அலைந்தது வரை இளவட்டங்களுக்கு அனுபவம் இருக்கும். அதுவும் மீறி எல்லாமே ஒரு தலைக்காதலாகப் போயிருந்தால் 'அம்மா அப்பா பார்த்துச் செய்த பெண்ணுடன்' கலியாணத்தின் பின்பான காதலிலாவது ஈடுபட்டிருப்பீர்கள். இந்தக் கட்டங்களில் அடிக்கடி கவிதை எழுதத் தோன்றும். சோகப் பாடல்கள் கேட்பதில் லயிப்பீர்கள். ம(து)ரக்குரல் மன்னர்கள் எல்லாம் பாட்டை முணுமுணுப்பார்கள். கண்ணாடிக்கு முன்னால் அதிக நேரம் செலவிடப்படும். வீட்டார் மீது அடிக்கடி கோபம் வந்திருக்கும். இப்படியான இன்னோரன்ன குணம் குறிகள் இருந்திருந்தால்.. உங்களுக்கு எய்ட்ஸ் நோய் பிடித்திருக்கிறது என்று அர்த்தம்.

அட நீங்க ஒண்ணு. AIDS என்றால் பயப்படாதீங்க... Adoration In Different Sex. அதாவது மற்ற பாலார் மீது ஏற்படும் தீராக் காதல். மற்றும்படி Acquired Immuno Deficiency Syndrome க்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்த நேரங்களில் உங்கள் தெய்வீகக் காதலை வெளியிட கடிதம் எழுத வேண்டும். எப்படி தொடங்குவது? இருக்கவே இருக்கிறது... மரபுச் சொற்றொடர்.

அலைகடல் வற்றினாலும் என் அன்புக்கடல் வற்றாத..... ஆகா! இதை விட்டால் வேறு வார்த்தையே கிடையாதா? தொடங்கினால் தொடர்வதற்கு பிறகென்ன, இருக்கவே இருக்கிறது தமிழ் படப் பாடல்கள்.. அன்புள்ள மான் விழியே,



# அறு(சு)வை

ஆசையில் ஓர் கடிதம் என்பது முதல் நான் அனுப்புவது கடிதம் அல்ல. இதில் உள்ளதெல்லாம் எழுத்தும் அல்ல என்பது வரை 'மூலம் குறிப்பிடாமல் மறுபிரசுரம் செய்ய வேண்டியதுதான்'. முடிவில் கடிதம் அண்ணன் கையில் சிக்கினுல்... 'நலம் நலம் தானு முல்லே மலரே, சுகம் சுகம் தானு முத்துச் சுடரே' என்று அவன் தன் கூட்டாளிமாருடன் ரேட்டில் காத்து நிற்பான்... நெளிவு எடுப்பதற்கு! பெண்ணின் கையில் சிக்கினுல்... விருப்பம் என்ருல் சிரிப்பு. விரும்பாவிட்டால் செருப்பு. அதாவது இடை மெலிந்தது இயற்கையல்லவோ. .. இல்லே, மூச்சை தம் பிடித்து வயிற்றை சுருக்கி கவர்ச்சி காட்டுவதற்காய்... அல்லது நடை தளர்ந்தது நாணம் அல்லவோ.. இல்லே, செருப்பை தூக்குவதற்காய்.

★ ★ ★

காதலிக்க தொடங்குபவன் எல்லாருடைய காதலும் தொடக்கத்தில் தெய்வீகமாய் இருப்பது ஏன் என்பது எனக்குப் புரிவதில்லே. தன்னுடைய தெய்வீகக் காதலே மற்றவர் புரிந்து கொள்ளவில்லேயே என்று புலம்புபவர்கள் உண்டு. தாடி வளர்ப்பது முதல் இன்னேரன்ன பணிகள் நடைபெறும்.

'காதலுக்கும் கவர்ச்சிக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. கவர்ச்சி கண்டவுடன் தோன்றுவது. காதல் என்பது நாள்தோறும் வளர்ந்து வேர் விட்டு முதிரும் நட்பு. கவர்ச்சி பாதுகாப்பின்மை உணர்வு காரணமாகத் தோன்றுவது. நீங்கள் மெய் சிலிர்த்துப் போயிருப்பீர்கள். ஆனுலும் மனதை உறுத்தும் சந்தேகங்கள், பதில் கிடைக்காத கேள்விகள் அதில் இருக்கும். ஆனுல் காதலிலோ... சரியான புரிந்துணர்வும் முழுமையின்மையை ஏற்றுக் கொள்கின்ற முதிர்ச்சியும் இருக்கும். அது உறுதியாக வளர்வது. கவர்ச்சியில் உங்களுக்கு மற்றவரை இழந்துவிடுவேனே என்ற பயம் வரும். உடனடியாகவே நாங்கள் ஒன்ருக வேண்டும் என்ற உணர்வு தோன்றும். ஆனுல் காதலிலோ 'பொறுமையாய் இரு, பயப்பட வேண்டாம், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் திட்டமிடுவோம்' என்று நினேப்பீர்கள்.

கவர்ச்சியில் பாலியல் விடயம் இருக்கும். நீங்கள் காதலர்களாவதற்கு முன்னர் நண்பர்களாக இருக்க வேண்டும். கவர்ச்சியில் நம்பிக்கையீனம் இருக்கும். மற்றவர் விலகிப் போனுல் உங்களே ஏமாற்றுகிருரோ என்று எண்ணத் தோன்றும். சில நேரங்களில் அது உண்மையா என்பதை அறிய முயல்வீர்கள். காதல் என்ருல் ஒருவரை ஒருவர் நம்புவீர்கள். பாதுகாப்பாக, அமைதியாக இருப்பீர்கள்"

இந்த கருத்துக்கள் ஆன் லாண்டர்ஸ் எழுதுகின்ற தொடரில் ரொறன்ரோ ஸ்டாரில் வெளிவந்தது. உங்களுக்கும் பொருந்துமோ?

★ ★ ★

சென்ற மாதம் 14ம் திகதி காதலர்கள் தினம்... வலன்ரைன் தினம். எனக்கும் எக்கச்சக்கமான காதலிகள்.. பாதிப்பேருக்கு அவர்களே நான் காதலித்தது தெரியாது. மீதிப்பேருக்கு என்னேயே தெரியாது. இதில் ஸ்ரீதேவி முதல் கொண்டு இப்போது ஹீரா வரைக்கும் ஏகப்பட்ட நடிகைகளும் அடக்கம். சில காதல்கள் முளேயிலேயே கருகியதும் உண்டு. கண்ணீர் விட்டோ வளர்த்தேன், செந்நீரால் காத்த காதல் ஒன்று கருகத் திருவுளமாகியது. இதை விட எனக்கே தெரியாத சில பெண்கள் என் மீது காதல் கொண்ட கதையை பின்புதான் அறிந்தேன். வயிறு பற்றி எரிந்தது. அரசனே நம்பிப் புருசனேக் கைவிட்ட கதையாகியது என் கதை. 'நீ காதலிப்பவரை விட, உன்னேக் காதலிப்பவரை திருமணம் செய்' என்பது தெரிந்திருந்தும்.... இதில் வேடிக்கை என்னவென்ருல்... நான் வெளிநாட்டிற்கு வந்த பின்னர் என் மாஜிக் காதலி தூர்ப்பநகாவிடம் போய் ஒரு பெண் என் மீதான தன் காதலேச் சொல்லி என் விலாசம் கேட்டதுதான்.

இப்போது அபித குஜாம்பாளுடன் திருமணத்தின் பின்னுன காதலில் ஈடுபட்டிருக்கிறேன்.

★ ★ ★

வலன்டைன் தினம் ஆரம்பத்தில் இத்தாலியர்களால் கொண்டாடப்பட்டதாம். புராதன காலங்களில் Lupercalia என்ற விழாவின் போது பெண்களின் பெயர்களே எழுதி சாடி ஒன்றுள் போட்டு அதிட்டம் பார்க்கப்படும். அதாவது பையன்கள் பெயரைத் தெரிந்தெடுப்பார்கள். தெரிந்தெடுத்த பெயர் கொண்ட பெண்ணுடன் பையன் சேர்ந்து.... பிறகென்ன, காதல் தான்.

ஹும்.. வயிறு பற்றி எரிகிறது. மண் தோன்றுமுன் தோன்றிய குடிக்கு இதெல்லாம் தெரியாது. சும்மா இலக்கியங்கள் எல்லாம் தலேவன், தலேவி என்று புழுகிக் கொண்டாலும் யாழ்ப்பாணத்தில் காதல் பண்ணுவது போல துன்பம் பிடித்த வேலே வேறு கிடையாது. முழுப்பேருக்குமே பயப்பட வேண்டும். பிடிபட்டால் அடி உதை.. பெண்ணுக்கு உடனடியாக வேறு திருமணம்...

ரோமானியர்கள் இங்கிலாந்தை வெற்றி கொண்ட போது இந்த விழாவும் அங்கே சென்றது. கிறிஸ்தவ மத தலேமைப்பீடம் இதை விரும்பாவிட்டாலும் பின்னர் புனித வலன்டைனின் பெயரை இதற்கு சூட்டினுர்கள். வெள்ளேயர்கள் இங்கே ஊர்களுக்கும் பெயர் வைத்திருக்கிருர்கள். சஸ்கச்சேவன் மாகாணத்தில் ஒரு இடத்திற்கு பெயர் Love. இங்கு 89 பேர் மட்டுமே வாழ்கிருர்கள். இந்த ஊருக்குள் நுழையும்போது 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' என்பது மாதிரி... Now You're in Love என்று இருக்குமாம். இதைப் போலவே அமெரிக்காவில் பென்சில்வேனியாவில் Intercourse என்ற பெயருள்ள இடம் இருக்கிறது.

இந்த வலன்டைன் பெயருக்கும் காதலுக்கும் சம்பந்தமே இருக்கும் போலிருக்கிறது. எனக்கு இந்தப் பெயரில் ஒரு நண்பன் இருந்தான். அவனுக்கு யாராவது ஒரு பெண் மேல் விருப்பம் தோன்றினுல் உடனே தங்களுக்குள் பெரிய காதல் விவகாரம் இருப்பது மாதிரி, கதை அளப்பான். அந்த வயதில் எங்களுக்கு எல்லாம் இப்படியான விசயங்கள் பெரிய சாதனே மாதிரித்தானே. பிறகு தானே தெரிந்தது.. அண்ணுச்சி.. யாவும் கற்பனேயே என்று.

இதைப் போல இன்னெரு பெண் இருக்கிருள். அவளது தோற்றம், தலேமயிர் நிறம், எந்தப் பாடசாலேயில் படித்தாள், எந்த பஸ்ஸில் வந்தாள் என்று சொன்னுல் மட்டுமே அவளே அடையாளம் காணக் கூடிய என் மட்டத்தினர் இருக்கக் கூடும். எனக்கு மகள் முறையானவள் ஒருத்தியின் சினேகிதி இவள். இவள் எந்தப் பையனேக் கண்டாலும் 'உவர் என்னே முந்திக் கேட்டவர், நான் மாட்டன் எண்டு சொன்னனுன்' என்பாளாம்.

★ ★ ★

காதல் வயப்பட்டவர்கள் என்ன தான் செய்ய மாட்டார்கள்? ஷாஜகான் மாதிரி மாளிகை கட்டுவது தொடக்கம் புகையிரதத் தண்டவாளத்தில் தலே ஒரு

வைப்பது வரை எல்லாமே நடக்கும். எனது மாணவ சிகாமணி ஒன்றுக்கு எனது மாணவி சிகாமணி ஒன்றின் மீது காதல்.. இது காதலா? கவர்ச்சியா? தெரியாது. பெண்ணுக்கு சுமார் எண் வயது இருக்கும். பையன் சின்னப் பையன். பெண் காதலை மறுத்துவிட்டாள். பையன் என்னிடம் வந்து அழுதான். 'அவ என் தெய்வீகக் காதலை புரிந்துகொள்ளவில்லை' என்று. பையன் படிப்பு இழந்தான். நிம்மதி இழந்தான். தூக்கம் இழந்தான். இறுதியாக தண்டவாளத்தில் தலை வைக்கும் வரை நிலை போனது. கடைசியில் அந்தப் பெண் இந்தக் கண்ணராவியைக் காணச் சகிக்காமல் அந்த காதலை ஏற்றுக் கொண்டாள். இப்போது என்ன ஆனார்களோ தெரியாது.

பள்ளிக்காதல் படலை மட்டும் தானே.. நம் பருவக் காதல் சுடலை மட்டும் தானே.. என்று பாடுகிறார்களோ என்னவோ!

★ ★ ★

இந்தப் பருவக் காதல்கள் எல்லாம் கவர்ச்சியினால் மட்டும் அல்ல என்று நினைக்கிறேன். இதைவிட அங்கீகாரம் என்ற ஒரு விசயமும் இருக்கிறது. பாடசாலை வயதில் ஒவ்வொருவனும் கதை விடுவான்... தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் காதல் என்று. மொத்தத்தில் அப்படி எதுவும் இருக்காது. இவனுக்கு அந்தப் பெண்ணில் ஒரு கண் இருந்திருக்கும். இதனால் அடிக்கடி சைக்கிளில் சுற்றி வந்திருப்பான். அவன் அப்படி வழிந்து அலைவதைப் பார்த்ததும் அவளுக்கு சிரிப்பு வந்திருக்கும். உடனே தன் காதலுக்கான அங்கீகாரமாக நினைத்துக் கொண்டு வந்து வகுப்பில் நடக்கும் கதை.... இதில நம்ம கூட்டாளி ஒருவன் அடிப்படி தனது (கற்பனை) நாயகிகள் பற்றி வந்து அளப்பான். இப்படி சொல்வதால் மற்ற கூட்டாளிகள் மத்தியில் தனக்கு விலாசம் என்று காட்டத் தான். recognition அந்த வயதில் ஒரு பிரச்சனையே தான்.

இப்படியாக அலைந்த சில பலருக்கு சைக்கிள் ஓட்டிக்களைத்தவன் கியூரியஸ். அவர்கள் ஜாலியாக பாரில் ஏறிக் குந்திக் கொள்ள... கியூரியஸ் நெஞ்சு நோக உழக்கியது தான் மிச்சம். ஓடும் சைக்கிளில் பாய்ந்து ஏறுதல், பாய்ந்து இறங்குதல், ஒற்றைக்காலால் பெடல் பண்ணி உதவி பண்ணுதல் போன்ற வீரசாகசங்களை அவர்கள் செய்து காட்டுவதற்கு கோமாளி மாதிரி நான் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்ததை நினைக்க.. எரிச்சல் வருகிறது. அந்த நேரத்தை சொந்தமாய் காதல் பண்ணுவதற்கு செலவிட்டிருந்தால்.. .. போதாக்குறைக்கு அந்தப் பெண்களின் அண்ணன்மாரைக் கண்டதும் வேகமாய் சைக்கிள் மிதிக்க வேண்டும். முடிகிற காரியமா, இந்த தடியர்களையும் ஏற்றிக் கொண்டு?

அதிலும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு போகும் போது அந்தப் பெண் இவர்களைக் கவனிக்கவே மாட்டாள். என்னடா, உன்ரை ஆள் கவனிக்காமல் போகுது என்று தெரியாத் தனமாய் கேட்டால்.. அது மச்சான், உன்னோட வந்தபடியால் அவளுக்குப் பிடிக்கேலை, வேற ஆக்களோட தன்னைப் பாக்க வர வேண்டாம் எண்டு நேற்றைக்கும் சொன்னவள் என்று பழியை என் மீது போட்டு விடுவார்கள். ஹ்ம்.. எனக்கு இதெல்லாம் தேவை தான். ஆனால் ஒன்று. அந்தப் பெண்களின் கண்ணில் படுகின்ற நேரங்களில் தங்களது தாராள மனத்தைக் காட்ட எனக்கு உபசாரம் அதிகமாகும். ஐஸ் கிரீம், கடலை என்று.. ஏதோ அந்தப் பெண்களுக்கு, வாங்கிக் கொடுக்கிற நினைப்பும் திருப்தியும் என்னோடு முடிந்து போகும். வாங்கிய கடனுக்கு மறுநாளும் நான் சைக்கிள் ஓட வேண்டியதுதான்.

★ ★ ★

இதற்குள் விலாசமாக Love three, Select two, Marry one என்று அரை குறை ஆங்கிலத் தத்துவங்கள் வேறு. ஏதோ எக்கச்சக்கமான பெண்கள் இவருக்குப் பின்னால் அலைகிறார்களாம், இவர் தெரிந்தெடுப்பாராம்.. இந்த ராஸ்கல்களிடம் போய்.. மச்சான், எப்படியடா லவ் பண்ணுறது என்று கேட்டால் போதும்.. ஏதோ அற்ப புழுவைப் பார்ப்பது போல ஒரு பார்வை.. உன் மூஞ்சிக்கெல்லாம் ஒரு காதல் வேண்டிக் கிடக்கிறது என்ற மாதிரி... அதுக்கு மச்சான்.. எண்டு தொடங்கினார்கள் என்றால்... கரைத்துக்குடித்த கதை தான். மன்மதக் குஞ்சுகள்.. காதல் பண்ணுறது இவர்களைப்போன்ற புத்திஜீவிகளால் தான் முடியும் என்ற நினைப்பைத் தந்து விட்டுப் போய் விடுவார்கள். இப்படியாக அந்த வயதில் அலைந்த என் கூட்டாளிகள் யாருமே அந்தப் பெண்களைத் திருமணம் முடித்ததில்லை. சில விண்ணர்கள் இருக்கிறார்கள்.. ஒரு 33ம் பக்கம் பார்க்க..

This newspaper
is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650.3216
@Compuserve.com

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினால்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்;
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய
உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள்
என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள்
கருத்துக்களை எழுத்து மூலமாக
அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள்
எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம்.
ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும்.
ஆக்கங்களின் கருத்து சிதையாமல்
மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை
உண்டு. ஆக்கங்களுடன் உங்கள்
தொலைபேசி இலக்கங்களையும்
விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.
ஆக்கங்களை மீளப் பெற
விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட
முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும்.
படைப்புகளில் சொல்லப்படும்
கருத்துக்களுக்கு எழுதியவர்களே
பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள்
ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய
அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள்
ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின்
காசோலைகளின் இலக்கம்
encoded செய்யப்பட்டிருக்க
வேண்டும். காசோலைகள்
அனைத்தும் Georgicka
communications பெயருக்கு
எழுதப்பட வேண்டும்.
(தாயகத்தின் பெயருக்கு
அல்ல)